Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 17 வெள்ளிக்கிழமை (02.11.2012) பக்கங்கள் 20 ஓசை – 033

விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு



இல. 187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0212219510 (C/1675)





















# மக்கள் நலத்திட்டங்களை குழப்புகிறது கூட்டமைப்பு

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மீண்டும் தர்க்கம்



(யாழ்ப்பாணம்)

யாழ். குடாவின் அபிவிருத்திக்கும் பொதுமக்களின் சகஜ வாழ்வுக்கும் குந்தகம் விளைவித்து அரசியல் இலாபம் தேடும் முயற்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு களமிறங்கியுள்ளது.

இதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் புதிய தந்திரோபாயங்களைக் கையாள ஆரம்பித்துள்ளனர்.

இதன் வெளிப்பாடாக மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் செயலமர்வுகளிலும் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திட்டமிட்டு செயற்பட ஆரம்பித்துள்ளனர்.

வடக்கில் குறிப்பாக யாழ். குடாவில் யுத்தத்துக்குப் பிந்திய அபிவிருத்தி நடவடிக்கைகள் தற்போது துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த அபிவிருத்தித் திட்டங்கள் தற்போது எதிர்பார்த்த பலனை பொதுமக்களுக்கு வழங்க ஆரம்பித்துள்ளன. இதனால் யுத்தத்தினால் நொந்துபோன மக்களின் வாழ்வில் சகஜ நிலையும் தோன்றியிருக்கிறது.

இத்தகைய சூழலுக்கும் துரிதமடைந்து வரும் அபிவிருத்திக்கும் தடைகளை ஏற்படுத்துவதன் மூலம் அரசுக்கு அவப்பெயரை தோற்றுவித்து அரசியல் இலாபம் தேடும் புதிய தந்திரோபாயத்தை கூட்டமைப்பினர் இப்போது கையாண்டு வருகின்றனர்.

நேற்று யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நல்லூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதன்போது வேண்டுமென்றே குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்குடன் கூட்டமைப்பு எம்.பி.க்கள் செயற்பட்டனர்.

தேசிய செயற்திட்டமான திவிநெகும

19 ஆம் பக்கம் பார்க்க

### அரசுக்கு நெருக்கடி வந்தாலும் மக்களுக்கு நிவாரணம் கிடைக்கும்

வரவு - செலவுத் திட்டத்தில் மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

எவ்வளவு நெருக்கடிகள் ஏற்பட்டாலும் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தும். கடந்த காலங்களில் நாடு முழுவதிலும் வறட்சி நிலவியது, இதனால் சில பிரதேசங்களில் குடிப்பதற்கு கூட நீர் தட்டுப்பாடு ஏற்பட்டது.

19 ஆம் பக்கம் பார்க்க

## 'திவிநெகும' கைநழுவிப் போனால் வறிய மக்களுக்கே அதிக பாதிப்பு

### யாழ். சமுர்த்தி இணைப்பாளர்

(நல்லூர்)

'திவிநெகும' சட்டமூலம் அமுல்படுத்தத் தவறினால் 90 வீதமான சமுர்த்தி உத்தியோகத்தர்களும் சமுர்த்திப் பயனாளிகளும் பெரிதும் பாதிக்கப்படுவரென யாழ். மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் ஏ.ரகுநாதன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றைய தினம் நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாடளாவிய ரீதியில் வசிக்கும் மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் சமுர்த்திப் பயனாளிகளாகவே உள்ளனர். குடாநாட்டிலும் 52 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் சமுர்த்தி உதவியினைப் பெற்று

19 ஆம் பக்கம் பார்க்க

### ஒரே பிரசவத்தில் ஐந்து குழந்தைகள்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் பிரசவத்துக்காக அனுமதிக்கப்பட்டுள்ள பெண்ணொருவர் ஒரே சூலில் ஐந்து சிசுக்களைப் பிரசவித்துள்ளார். 23 வயதுடைய பெண்ணொருவரே 5 சிசுக்களைப் பிரசவித்துள்ளார். இதில் மூன்று பெண் சிசுக்களாகும். இதேவேளை கேகாலையைச் சேர்ந்த பெண்ணொருவர், ஒரே சூலில் ஐந்து சிசுக்களையும் கண்டியைச் சேர்ந்த மற்றொரு பெண் 3 சிசுகளையும் அண்மையில் பிரசவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## காணாமற்போனோரை கண்டறிய தேசிய பொறிமுறை அரசு வசம்

### ஜெனிவாவில் அமைச்சர் சமரசிங்க

(கொழும்பு)

கடத்தல்கள் காணாமல் போதல்கள் தொடர்பில் விசாரணை நடாத்த தேசிய பொறிமுறைமையொன்று உருவாக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 14 ஆம் அகில கால மீளாய்வு அமர்வுகளில் நேற்றுக் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 20 ஆண்டு காலப்பகுதியில் காணாமல் போதல்கள் தொடர்பாக 5600 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

உண்மையில் காணாமல் போனவர்கள் பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதற்கு

19 ஆம் பக்கம் பார்க்க

### நாளைய தினமுரசில்...

வே. அர்ச்சுணன் எழுதும் "விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள்" கட்டுரைத் தொடரின் 2 ஆம் பகுதி.



## சிறு விளம்பரம்

### 'வலை' யின் இழை–12 வெளிவந்துவிட்டது

சமகால பத்திரிகை பொது அறிவுத் தொகுப்பான 'வலை' யின் செப்ரெம்பர் மாத இழை - 12 வெளிவந்து விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை மற்றும் குடாநாட்டின் முன்னணி புத்தக நிலையங்களில் பெற்றுக்கொள்ள முடியும். தொகுப்பாசிரியர் : சி.என்.எச்.சாள்ஸ்.

## பரிசளிப்பு விழா

யோகபுரம் மகாவித்தியாலயத்தில் இன்று காலை 9.00 மணிக்கு தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா இடம்பெறவுள்ளது.

அதிபர் த.யோகானந்தராஜா தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றன் கலந்துகொள்ளவுள்ளார்.

துணுக்காய் வலயத்தில் அதிகூடிய பிள்ளைகள் இப்பாடசாலையில் சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (148)

## இலவச மருத்துவமுகாம்

(சாவகச்சேரி)

ஜக்கிய இராச்சியம் தென்மராச்சி அபிவிருத்திக் கழகத்தின் அனுசரணையுடன் சாவகச்சேரி நீரிழிவு சிகிச்சை நிலையத்தினால் நீரிழிவு தொடர்பான இலவச மருத்துவ முகாம் நாளையும், நாளை மறுதினமும் காலை 8.00 மணி முதல் ஒரு மணி வரை நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி பூவேந்தர் பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ள இலவச மருத்துவ முகாமில் இரத்தப் பரிசோதனை, உடல் நிறை, உடற்பருமன், கண் பரிசோதனை என்பன இலவசமாக பரிசோதிக்கப்படவுள்ளன.

மேலும் வைத்திய நிபுணர் த.ஸ்ரீதரன் நீரிழிவு உடற் பருமன் தொடர்பாக கருத்தரங்கை நடத்தவுள்ளார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் ஒழுங்மைப்பில் நடைபெறும் இம்மருத்துவ முகாமிற்கான அனுசரணையை சாவகச்சேரி பூவேந்தர் ஸ்தாபகர் சி.மகாலிங்கம் வழங்கவுள்ளார். (11)

## வலி.தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய்

### வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2012

பின்வரும் வேலைகளுக்கு இக்ராட் (ICTAD) பதிவுடைய ஒப்பந்தக்காரர்களிடம் அறிவுறுத்தலிலுள்ள வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் செலுத்தி படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி:- 02.11.2012 - 08.11.2012 பி.ப. 2.00 மணி வரை
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:- 09.11.2012 நண்பகல் 12.00 மணி வரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி :- 09.11.2012 பி.ப. 2.00 மணி (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.
05. மூல கேள்விப்பத்திரத்தை அரக்கு முத்திரையிட்டு **தவிசாளர், வலி.தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.** என்ற முகவரிக்கோ அல்லது தலைமையலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ 2 ஆம் பந்தியில் குறிப்பிட்டதற்கமைவாக, கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். ஒரு பிரதியை **பிராந்திய உ.உ.ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
06. வேலைகள் யாவும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட திகதியிலிந்து ஒரு மாத காலத்திற்குள் நிறைவேற்றப்படல் வேண்டும்.
07. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

| இல | வேலை விபரம் | இக்ராட் தரம் | கேள்வி வைப்புப் பணம் (மீளளிப்பு) | கேள்விப் பத்திரக் கட்டணம் | Vat |
|---|---|---|---|---|---|
| 01 | கனல் வடிகால் புனரமைப்பு மாதகல் கிழக்கு. மாதகல் | C8 | 22,500.00 | 1000.00 | 142.40 |
| 02 | வடலியடைப்பு வடிகால் அமைத்தல். வைத்தியசாலை வீதி. | C8 | 25,000.00 | 1000.00 | 142.40 |

**திரு.அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன்,**
**தவிசாளர்,**
**வலி.தென்மேற்கு பிரதேசசபை,**
**மானிப்பாய்.**
**01.11.2012.**

(C/2086)

## யாழ்ப்பாணம் மாநகரசபை

### நவீன சந்தைத் தொகுதியிலுள்ள கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான

### கேள்வி அறிவித்தல் - 2012

மாநகர சபைக்குச் சொந்தமான கீழ்வரும் இலக்கங்களைக் கொண்ட கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான விண்ணப்பங்கள் யாழ்.மாநகர சபையால் கேள்வி கோரப்படுகின்றது.

கேள்விப்படிவக் கட்டணம் - ரூபா 500.00 (வற்வரி, தே.வரி நீங்கலாக)
கேள்விப்படிவம் விநியோகித்தல் - 2012.11.05 - 2012.11.19 மு.ப. 10.00 மணி வரை
கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் - 2012.11.19 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விப்படிவம் திறத்தல் - 2012.11.19 பி.ப 2.30 மணிக்கு

விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மூலையில் கடையின் பெயர் குறிப்பிட்டு மாநகரசபை நானாவித இறைவரிப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.


தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம். என்ற முகவரியிட்டு 2012.11.19 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கும் நேரத்தில் கேள்வி தாரர்கள் அல்லது அவர் சார்பில் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமூகமளிக்கலாம்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக் கொள்ளவும்.

| கடைகள் விபரம் | கடை இலக்கம் | கடையின் விஸ்தீரணம் | கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (வற், தே.க.வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| நவீன சந்தை மேல்மாடி 2ஆம் கட்டம் | 01 | 87'X45' | 20000.00 | 14040000.00 |
| நவீன சந்தை மேல்மாடி 2ஆம் கட்டம் | 04 | 87'X45' | 20000.00 | 14040000.00 |

திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா,
மாநகர முதல்வர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(C/2085)



## பாராட்டி வாழ்த்துகிறோம்

**யாழ்.மாவட்ட மட்கல மன்றத்தின் ஊடாக மட்கலத் தொழிலாளர்கள் தமது வாழ்வாதாரத் தொழிலை மேம்படுத்தும் நோக்குடன் தமது தேவைகள் குறித்து**

**பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்**

### கௌரவ கே.என். டக்ளஸ் தேவானந்தா

**அவர்களுடன் கலந்துரையாடியதற்கு அமைவாக 25 மட்கலத் தொழிலாளர் குடும்பங்களுக்கு மிக விரைவாக கூரைத் தகடுகள் கிடைக்கச் செய்தமைக்காக கௌரவ அமைச்சர் அவர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் மேலும் பல்லாண்டு காலம் பல சேவைகள் புரிந்து நீடுழி வாழ்க என வாழ்த்துகின்றோம்**

**ஆடியபாதம் வீதி,**
**நல்லூர்.** (C/2084)

**மட்பாண்ட கலைஞர் கூட்டுறவுச் சங்கம்**

# இராணுவத்தினரின் வீட்டுத்திட்டம்; மக்களோடு நல்லுறவைக் காட்டுகிறது

— யாழ்.அரச அதிபர் —



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மீள்குடியேறிய மக்களுக்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களினால் அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கும் 25 ஆயிரம் வீடுகளில் இரண்டாயிரம் வீடுகள் இராணுவத்தினரின் நிதியின் மூலம் அவர்களாலேயே அமைத்து வழங்கப்பட்டிருக்கிறது. இது பொது மக்கள், இராணுவத்தினரிடையே உள்ள நல்லுறவை எடுத்துக் காட்டுவதாக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள பாதுகாப்புப் படைகளின் பொதுமக்கள் தொடர்பு அலுவலகத்தில் நடைபெற்ற யாழ்.மாவட்டத்தில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை படைத்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில்,

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி மகிந்த ஹித்துருசிங்கவின் நெறிப்படுத்தலில் இராணுவத்தினரின் இந்த நடவடிக்கையும், இராணுவம், பொதுமக்கள் நல்லுறவிற்கு மேலும் ஒரு எடுத்துக்காட்டாகும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் யாழ்.குடாநாட்டில் அபிவிருத்தி நடவடிக்கைகளிலும், துப்பரவுப் பணிகளிலும் கட்டளைத்தளபதியின் நெறிப்படுத்தலில் இராணுவத்தினர் பங்கு கொண்டிருக்கின்றனர்.

இதுவும் இந்த மாவட்டத்தின் நிர்வாக நடவடிக்கைகளுக்குப் பேருதவியாக இருந்து வருவதாகவும் தெரிவித்த யாழ். அரசாங்க அதிபர் இவ்வாறு பொலிஸார், இராணுவத்தினர், அரச அதிகாரிகள், பொது மக்கள் ஒன்றுபட்டுச் செயலாற்றுகின்ற போது இந்த மாவட்டம் அபிவிருத்தியடையும் எனவும் தெரிவித்தார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சாதனை புரிந்த இந்த மாணவர்கள் எதிர்காலத்திலும் சாதிக்க வேண்டும். அண்மையில் யாழ்.மாவட்ட கல்வி நிலையில் முன்னேற்றம் காணப்படுகிறது. எனவே இந்த மாவட்டம் கல்வி வளர்ச்சியில் முன்பிருந்த நிலையை எட்ட வேண்டும் என்றும் தெரிவித்தார். (பா)



யாழ்.உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணியில் வல்வெட்டித்துறை பொலிஸ் உத்தியோகத்தர்கள், உடுப்பிட்டி பிரதேச பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் கல்லூரி மாணவர்களும், உத்தியோகத்தர்களும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதைக் காணலாம். (116)

## தொலைபேசிக் கம்பங்கள் கடும் காற்றினால் சரிந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடா நாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு வீசிய காற்று மற்றும் கடற்கொந்தளிப்புக்காரணமாக யாழ்.பண்ணை - ஊர்காவற்றுறை வீதியில் நடப்பபடடிருந்த தெலைபேசிக் கம்பங்கள் சரிந்து வீழ்ந்ததுடன் கடல் நீரும் வழியை ஊடறுத்துப் பாய்ந்துள்ளது.

இந்த வீதியில் பண்ணைக்கும், மண்டைதீவுச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியிலேயே இந்தத் தொலைபேசிக்கம்பங்கள் சரிந்து வீழ்ந்துள்ளதுடன் சில இடங்களில் கடல் நீர் மேற்கில் இருந்து கிழக்காகப் பாய்ந்துள்ளது.

அத்துடன் இந்த வீதிப்பகுதிகளில் கடல் அரிப்பு ஏற்பட்டிருப்பதனை அவதானிக்க முடிந்தது. மேலும் கடலினுள்ளே நடப்பட்டிருந்த தொலைபேசிக் கம்பங்களே சரிந்து வீழ்ந்துள்ளன என்பதுடன் தீவுப்பகுதிகளுக்கான தரைவழித் தொலைபேசிக் கம்பங்கள் நடப்பட்டு அண்மையிலேயே இணைப்பு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (பா)

## அரியாலை வயல் மழையால் செழிப்பு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் பெய்த கனமழையினால் அரியாலை, கல்வியங்காடு, செம்மணி, மறவன்புலோ போன்ற பகுதிகளில் உள்ள வயல் நிலங்கள் விதைப்பின் பின் செழித்துள்ளன.

கல்வியங்காடு, அரியாலைப் பகுதி வயல்களும், தீவகம் மற்றும் மண்டைதீவு வயல்களும் மழை வீழ்ச்சியின் பின் அதிகளவான நீர் தேங்கி நிற்பதால் முளை கதிர் விட்டு ஒருசாணுக்கு மேலாக பயிர்கள் வளர்ந்துள்ளன.

முளை வெள்ளத்தில் இருந்து தப்பி விட்டதால் இனியொரு வெள்ளம் வந்தாலும் அதற்கேற்ற வேகத்தில் பயிர்கள் வளர்ந்து விடும் என எதிர்பார்ப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (23)

## கேபிள் பொருத்தும் பணிகள் ஆரம்பம்

(மண்டைதீவு)

இந்த வருட இறுதிக்குள் மின்சாரம் வழங்குவதற்காக அல்லைப்பிட்டிச் சந்தியில் இருந்து மண்டைதீவு சந்தியூடாக மண்டைதீவின் மையப்பகுதி வரை நடப்பட்ட மின்சாரக் கம்பங்களுக்கு கேபிள் வயர்பொருத்தும் நடவடிக்கைள் ஆரம்பமாகியுள்ளதாக மின்சாரசபை வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

அண்மித்த மாதங்களில் தீவகத்துக்கு வருகைதந்த மின்துறை அமைச்சர் சம்பிக்கரணவக்க இந்தக் கிராமத்துக்கு இந்த வருட இறுதிக்குள் மின்சாரம் வழங்கப்படுமென உத்தரவாதமளித்திருந்தார்.

குறிப்பாக இப்பிரதேசத்தில் உள்ள மின் கம்பங்களுக்கு மின் வயர்கள் இணைக்கப்பட்டு வருவதால் கிராமமக்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்து வருவதாகவும், மின்சாரம் கிடைத்த பின்பே மண்டைதீவு ஒளிபெறும் என்று நம்பலாம் என அவர்கள் தெரிவிக்கின்றனர். (23)

## 28 முதியவர்கள் சமூகத்துடன் இணைப்பு

(திருநெல்வேலி)

கைதடி முதியோர் இல்லதில் இருந்த 28 முதியவர்கள் மீண்டும் சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர். ஆண்கள் 14 பேரும், பெண்கள் 14 பேருமாக இவர்களின் பிள்ளைகள் மற்றும் உறவினர்களுடன் இலல அத்தியட்சகர், உத்தியோகத்தர்களினால் சேர்த்து வைக்கப்பட்டனர்.

இம்முதியோர்களின் பிள்ளைகள் மற்றும் உறவினர்களை இல்லத்திற்கு அழைத்து அவர்களுடன் கலந்துரையாடி அவர்களுக்கிடையே இருந்த அடிப்படை முரண்பாடுகளை நீக்கி சுமுகமான முறையில் அவர்களின் பூரண சம்மதத்துடன் அவர்கள் இணைந்து கொண்டனர்.

பல மாதங்களாக தாயாரைப் பிரிந்திருந்த மகளொருவரும், கொழும்பிலிருந்து வந்து தாயாரைக் கட்டி முத்தமிட்டு அவரைத் தன்னுடன் அழைத்துச் சென்றுள்ளாார்.

மூத்த பிரஜைகள் சமூகத்தில் வைத்தே பிள்ளைகளால் பராமரிக்கப்படல் வேண்டும் என்னும் எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டு முதியோர் நலன் பேணல் இல்லத்தினால் முன்னகர்த்தப்படுகின்றது. (137)

## வல்வெட்டித்துறையில் டெங்கு ஒழிப்பு



(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நறுவிலடிப் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக டெங்கு நோய் இனங்காணப்பட்டதை அடுத்து அந்தப் பகுதியில் இருந்து சுமார் 500 மீற்றர் வரையான பகுதியில் உள்ள வீடுகள், வெற்றுக் காணிகள், கைவிடப்பட்ட வீடுகள் மற்றும் மீன் சந்தைப் பகுதியில் டெங்கு நோய் பரப்பக்கூடிய நுளம்புகளைக் கட்டுப்படுத்துவதற்காக பருத்தித்துறை சுகாதார வைத்திய பணிமனையுடன் இணைந்து வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் சுகாதாரப் பிரிவினால் நுளம்புகளை அழிப்பதற்கான புகையூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் விரைவான சுகாதார பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டமையால், அந்தப் பிரதேசங்களில் டெங்கு நோயைப் பரப்பக்கூடிய நுளம்புகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரக் கூடியதாக இருந்தது.

கொழும்பு தெஹிவளை போன்ற பகுதிகளுக்குச் சென்று வருபவர்களே இவ்வாறு பாதிக்கப்படுவதால், இவ்வாறான டெங்கு பரவும் இடங்களுக்குச் சென்று வருபவர்கள் தம்மை உரிய மருத்துவ சிகிச்சைக்குட்படுத்திக் கொள்ளுமாறு நகர சபைத்தலைவர் நடராஜா அனந்தராஜ் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது வல்வெட்டித்துறையில் இனங்காணப்பட்ட இரண்டாவது பிரதேசமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. அதேவேளை நுளம்புகள் பெருகும் இடங்களைத் துப்பரவு செய்து நீர் தேங்கும் இடங்களை மூடி நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த நகர சபையுடன் ஒத்துழைக்குமாறும் அவர் பொது மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

## கடற்கொந்தளிப்பால் 14 கடற்கலங்கள் சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கடந்த சில நாட்களாக கரையோரப் பகுதிகளில் நிலவி வந்த கடும் காற்று மற்றும் கடற்கொந்தளிப்புக் காரணமாக கடற்றொழிலாளர்களது 14 கடற்கலங்கள் சேதமடைந்திருப்பதாக யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடற்கரையோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்தக் கடற்கலங்கள் கடும் காற்று மற்றும் கடற்கொந்தளிப்புக் காரணமாக கரையில் மோதுண்டும் ஒன்றுடன் ஒன்று மோதுண்டதாலும் இந்தச் சேதங்கள் ஏற்பட்டதாகத் தெரிவித்த திணைக்கள அதிகாரி முன்கூட்டியே எச்சரிக்கை விடுக்கப்பட்டதன் காரணமாகப் பெரும்பாலான கடற்கலங்கள் கரையில் இருந்து விடப்பட்டதனாலும் மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்லாமையினாலும் மேலதிக சேதம் தவிர்க்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

ஏற்பட்டுள்ள இந்தச் சேதவிபரங்களின்படி நாகர்கோவில் பகுதியில் 4 கடற்கலங்களும் நெடுந்தீவுப் பகுதியில் 8 கடற்கலங்களும், வடமராட்சி இன்பருட்டிப் பகுதியில் இரண்டும் என சேத மேற்பட்டுள்ளதுடன், இவை உடனடியாகப் பயன்படுத்த முடியாத அளவிற்கு உள்ளதாகவும் தெரிய வருகின்றது. (பா)

வியர்வைத் துளிகளும் கண்ணீர்த் துளிகளும் உப்பாக இருக்கலாம். ஆனால், அவை தான் வாழ்வை இனிமையாக மாற்றும். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## குழப்பிக் குழப்பிச் செய்யும் அரசியல்!

தீர்வை மட்டுமல்ல தமிழ் மக்களுக்கு எது கிடைத்தாலும் தமிழ் மக்களுக்காக யாரென்ன செய்தாலும் அதைக் குழப்பியேதான் தீருவோம் என்று வெளிப்படையாகவே செயற்பட ஆரம்பித்திருக்கிறார்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர். "இனி தமிழ்மக்களுக்கான தீர்வுக்கு என்ன செய்யவேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு இந்தியாவையும் சர்வதேசத்தையுமே சார்ந்ததாகும்" என்று அண்மையில் தங்களது கையாலாகாத்தனத்தை அறிவித்துவிட்டு, இங்கு எது நடந்தாலும் அதைக் குழப்புவதன் மூலம் தங்கள் இருப்பைக் காட்டிக்கொண்டிருக்கலாம் என்று முடிவெடுத்துவிட்டார்கள் என்று தெரிகிறது.

நேற்றுமுன்தினம் வவுனியாவில் பண்டாரவன்னியன் நினைவு தின நிகழ்வின்போது, தங்கள் கட்சிப் பதாகையைக் கொண்டுவந்து கட்டி நிகழ்ச்சியைக் குழப்பினார்கள் என ஏற்பாட்டுக்குழுவினர் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்கள். அரசியல் கலப்பற்ற விதத்தில் நடத்துவதென வவுனியா நகரசபையில் முடிவெடுத்தபிறகே அதன்படி நிகழ்வு நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, இடையில் தனது ஆதரவாளர்களுடன் புகுந்த கூட்டமைப்பு எம்.பி. ஒருவர் மேடையில் தமது கட்சியின் பதாகையை வலோத்காரமாகக் கட்டுவித்திருக்கிறார். இது அரசியல் நிகழ்ச்சியல்ல, பதாகையை அகற்ற வேண்டும் என்று ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டபோது அடாவடியாக மறுத்திருக்கிறார். ஏற்பாட்டாளர்களும் விழாக்குழுவினரும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கலைந்துசென்ற பிறகு, எம்.பியின் ஆதரவாளர்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டத்தை அங்கு நடத்தியிருக்கிறார்கள்.

அதுபோலவே, நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் நால்வர் கலந்துகொண்டு கூட்டத்தைக் கூச்சலிலும் குழப்பத்திலும் முடித்திருக்கிறார்கள். இதற்கு முன்னர் கடந்த மாதம் நடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தையும் இவ்வாறே அநாகரிகமான வார்த்தைப் பிரயோகங்களோடு கத்திக் கூச்சலிட்டுக் குழப்பியிருந்தார்கள்.

அதற்கு முன்னரெல்லாம் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் கலந்துகொள்ளாமல் இவர்கள் அலட்சியப்படுத்தி வந்தார்கள். மக்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகளும், அதற்கான திட்டங்களும், அபிவிருத்திகளும் தங்களது அரசியலுக்கே எதிரானது என்ற நோக்கில் இவர்கள் உதாசீனத்துடன் இருந்தார்கள். ஆனால், இந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் எடுக்கப்படும் முடிவுகளால், மக்களின் தேவைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன, அபிவிருத்திகள் நடக்கின்றன என்று தெரியவந்தவுடன் கூட்டமைப்பினர் முழுமூச்சாக இக்கூட்டங்களுக்குச் செல்வதில் ஆர்வங்காட்டினார்கள்.

இந்தக் கூட்டங்களுக்கு தங்களுக்கு முறையான அழைப்பு அனுப்பப்பட வேண்டும் என்றும், அழைப்புக் கடிதம் இன்னும் வந்துசேரவில்லை என்றும் நச்சரிக்கத் தொடங்கினார்கள். தபால் நிலையத்திற்கெல்லாம் போன் போட்டு விசாரித்து கடிதம் கைக்கு வந்துசேரவில்லை என்பதை அவர்களது பத்திரிகையிலும் எழுதிப் பிரசுரித்திருந்ததை சமீப நாட்களில் காணமுடிந்தது.

இத்தகைய அவர்களது திடீர் ஆர்வத்தையும், கடைசியாக நடந்த இரு கூட்டங்களிலும் இந்தக் கூட்டமைப்பு எம்.பிக்கள் கத்திக் கூச்சலிட்டிருப்பதையும், அடுத்த நாளே அவர்களது பத்திரிகையில் கூட்டம் குழப்பத்தில் முடிந்ததை விவரித்து எழுதுவதையும் பார்க்கும்போது, இவர்கள் திட்மிட்டே இத்தகைய நடவடிக்கையில் இறங்கியிருப்பதை யாருக்கும் புரிந்துகொள்வது சிரமமல்ல.

திவிநெகும சட்டமூலத்தை அமுல்படுத்த முடியாமல் போனால், யாழ்ப்பாணத்தில் உள்ள 54,199 சமுர்த்திக் குடும்பங்களின் நிலை என்ன? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதற்கு என்ன பதில் கூறுகிறது எனக் கேட்டதற்கே, கூட்டமைப்பு எம்.பிக்கள் நிதானமிழந்து கூச்சலிடத் தொடங்கியிருக்கிறார்கள். மக்களைத் தொடர்ந்து பாதிப்புக்குள்ளாக்கும் அரசியலைச் செய்கிறீர்கள் என்பதைச் சுட்டிக்காட்டினால் கோபம் வருவது இந்த மக்கள் பிரதிநிதிகளுக்கு நல்லதல்ல; மக்களுக்கும் நல்லதல்ல.

- ஆசிரியர்

## மொழிப் பிரச்சினைக்கு தீர்வுகாண நீதித்துறை செயற்பாடுகள் தமிழில்

தமிழ்க் கைதிகள் தமது நீதித்துறை செயற்பாடுகளின் போது முகங்கொடுக்கும் மொழிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண உடனடி நடவடிக்கை எடுக்கப்போவதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இதன்படி நீதிமன்ற மொழி பெயர்ப்பாளர்களை நியமிக்கப் போவதாகவும் விசாரணைகளை தமிழில் நடத்தப்போவதாகவும் குற்றப்பத்திரிகைகளை தமிழில் தயாரிக்கப்போவதாகவும் கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தமிழ்க் கைதிகளை நேற்று முன்தினம் பார்வையிட்டபோது அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

தமது வழக்குகள் தொடர்பாக நீதித்துறை செயன்முறைகள் தனிச் சிங்களத்தில் காணப்படுவதால், தாம் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக தமிழ்க் கைதிகள் சுட்டிக்காட்டினர்.

விடுதலைப் புலிகளின் செயறபாடுகளுடன் தொடர்புபட்டிருந்த தமிழ் சந்தேகநபர்களின் நீதிமன்ற செயன்முறையில் ஒரு புதிய ஒழுங்குகளைக் கொண்டுவர விசேட நீதிமன்றங்களை அமைக்கவுள்ளதாக அமைச்சர் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்தார்.

சிறைச்சாலைகளில் விடுதலைப் புலிச் சந்தேகநபர்கள் 359 பேர் இருப்பதாக நாடாளுமன்றத்தில் அரசாங்கம் கடந்த மே மாதம் அறிவித்திருந்தது. இவர்களில், 309 பேரின் வழக்குகள் நிறைவடைந்துவிட்டதாகவும் அரசாங்கம் அதன்போது அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மதுவரி சாஜனாக நால்வர் பதவிஉயர்வு

மதுவரித் திணைக்கள சாஜனாக யாழ். மாவட்டத்தில் இருந்து நான்கு பேர் பதவியுயர்வு பெற்றுள்ளதாக யாழ். மாவட்ட மதுவரித் திணைக்களம் தெரிவித்தது.

நாடளாவிய ரீதியில் நடைபெற்ற மதுவரி சாஜன் பதவியுயர்வு பரீட்சைக்கு 450 பேர் தோற்றிய நிலையில் 67 பேர் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட 67 பேரில் 4 பேர் யாழ். மாவட்டத்தினை சேர்ந்தவர்களாவர். இவர்களுக்கான விஷேட வதிவிடப் பயிற்சி கொழும்பு மதுவரித் திணைக்களத்தில் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. மதுவரி சாஜன் பதவியுயர்வுப் பரீட்சை 15 வருடங்களுக்கு பின்னர் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## புலிகள் சுட்டு வீழ்த்திய விமானத்தின் சிதறல்கள், சடலங்கள் மீட்கப்படும்

14 வருடங்களுக்கு முன் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் "லயன் எயார்" விமானத்தில் பயணித்தவர்களின் சடலங்களைத் தோண்டி எடுப்பதற்கு படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

குறித்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து கடலில் மிதந்து வந்த சுமார் 10 முதல் 15 சடலங்களை நாச்சிக்குடா கடற்கரையில் புதைத்ததாக மீனவர்கள் வழங்கிய தகவல்களை அடுத்தே அந்த சடலங்களை தோண்டி எடுப்பதற்கு படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, சுட்டு வீழ்த்தப்பட்ட விமானத்தின் சிதைவுகள் நாச்சிக்குடாவுக்கும் இரணைதீவுக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் சுமார் 8 மீற்றர் ஆழத்தில் புதைந்திருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

அந்தச் சிதைவுகளையும் ஏக காலத்தில் அகழ்ந்தெடுப்பதற்கு படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இராணுவம், கடற்படை மற்றும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்தோரே இணைந்து இந்தச் சடலங்கள் மற்றும் விமானத்தின் சிதைவுகளை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் வணிகசூரிய தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைகள் நேற்று முன்தினம் முன்னெடுக்கவிருந்த போதிலும், காலநிலை சீர்கேடு காரணமாக அந்நடவடிக்கை ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்றும் இராணுவப் பேச்சாளர் மேலும் கூறினார்.

பலாலி விமான நிலையத்திலிருந்து கடந்த 1998 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 29 ஆம் திகதி 48 பயணிகள், 6 விமானப் பணியாளர்கள் மற்றும் இரு உக்ரேனிய விமானிகளுடன் இரத்மலானைக்கு போகப்புறப்பட்ட இந்த விமானம், புறப்பட்டு 10 நிமிடங்களின் பின் ராடர் திரையிலிருந்து மறைந்துபோனது.

இதன் மர்மம் இன்னும் பூரணமாகத் துலங்காத நிலையில் மேற்படி விமானத்தின் பாகங்களும் அதில் பயணித்தவர்களின் சடலங்களையும் கடற்படையினர் கண்டுபிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாவனையாளர் சட்டத்தை மீறிய 25 ஆயிரம் வர்த்தகர்கள் மீது வழக்கு

இந்த வருடத்தின் ஜனவரி மாதம் முதல் ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதிவரையான பத்து மாதகாலப் பகுதியில் நாடு முழுவதிலும் பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தை மீறிய வர்த்தகர்கள் 25 ஆயிரம் பேருக்கெதிராக வழக்குகள் தொடரப்பட்டுள்ளதாக பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபைத் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்தார். கூட்டுறவு மற்றும் உள்ளூர் வர்த்தகம் தொடர்பான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோவின் பணிப்புரையின் பேரில் நாடளாவிய ரீதியில் இந்த திடீர் முற்றுகைகள் நடத்தப்பட்டன.

கொழும்பு, கம்பஹா, கண்டி, மாத்தளை, குருநாகல் ஆகிய மாவட்டங்களிலேயே பெருமளவு எண்ணிக்கையில் இந்த திடீர் சோதனைகள் நடத்தப்பட்டன. இந்த திடீர் சோதனைகள் மூலம் பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபை 7கோடியே 75ஆயிரம் ரூபாவை அபராதத் தொகையாக பெற்றுள்ளதாகவும் அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையாக 3054 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. அவ்வாறே கம்பஹா மாவட்டத்தில் 2136, மாத்தளை மாவட்டத்தில் 1552, கண்டி மற்றும் குருநாகல மாவட்டங்களில் 1870 என்ற எண்ணிக்கையில் இந்த திடீர் சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

அரச முத்திரை பதிக்கப்படாத அளவை நிறுவை உபகரணங்களைப் பாவித்தல் , எடை குறைந்த பாண் உற்பத்தி செய்தல், அளவை நிறுவையில் மோசடி செய்தல் போன்ற குற்றச்சாட்டுகளின் பேரிலேயே இந்த வர்த்தகர்களுக்கெதிராக வழக்குத் தொடரப்பட்டது.

பாவனையாளர்களின் நலன் கருதி எதிர்காலத்திலும் இத்தகைய திடீர் சோதனைகள் நடத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 48 முன்னாள் போராளிகள் உறவினர்களிடம் கையளிப்பு

(கொழும்பு)

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது படையினரிடம் சரணடைந்த முன்னாள் போராளிகளில் 48 பேர் முழுமையான புனர்வாழ்வுக்குப் பின் நேற்று முன்தினம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இவ்வாறு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டவர்களில் 7 பெண்கள் உள்ளடங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், 782 முன்னாள் போராளிகள் இன்னமும் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு வருவதுடன், அவர்களில் 19 பெண்கள் உள்ளடங்குவதாகவும் புனர்வாழ்வு ஆணையாளர் குறிப்பிட்டார்.

இவர்கள், மன்னாரிலுள்ள மருதன்காடு, பூந்தோட்டம் ஆகிய புனர்வாழ்வு முகாம்களிலும் வெலிகந்தையில் அமைந்துள்ள சேனபுர மற்றும் கந்தர்கொட ஆகிய புனர்வாழ்வு முகாம்களிலும் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# சின்மயியை முன்வைத்து... தமிழ்த் தேசிய அலசல்

- ஆர்.அபிலாஷ் கட்டுரையிலிருந்து

ஈ.வெ.ரா.பெரியார் தமிழ் மொழியின் அருமைபெருமைகளை நினைவுகூர்ந்து சிலாகிக்கும் வகை அரசியல் தலைவர் அல்ல. அவர் ஒரு நடைமுறைவாதி. பண்பாட்டுப் பெருமைகள் நடைமுறைப் பிரச்சினைகளைத் தீர்க்காது என அவருக்குத் தெரியும். ஆனால் பெரியாருடன் இந்த மொழி மற்றும் பண்பாட்டு பெருமித விசயத்தில் அண்ணா முரண்பட்டார். அவர் அனைத்து மதங்கள், சாதிகள் சேர்ந்தவர்களையும் தமிழர் எனும் அடையாளம்கீழ் ஒருங்கிணைக்க விரும்பினார். ஏனெனில் வேறுபாடு-களைத் தவிர்க்கும் சமரசப் போக்குதான் தன் கட்சியின் நிலைப்பாட்டுக்கும் உதவும் என அவர் அறிந்திருந்தார். ஆக, இந்த தமிழ்தேசிய அரசியலின் விளைவாக மத்திய சாதிகள் தமக்குக் கீழுள்ளோரை ஒடுக்குவதை நாம் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக, கண்டும் காணாமல் விட்டு வருகிறோம். தமிழகத்தில் பிராமணர்கள் மட்டுமே சாதி ஒடுக்குமுறை செய்வதாய் இன்றும் தொடர்ந்து வலியுறுத்த முயல்கிறோம்.

சின்மயி இடஒதுக்கீட்டுக்கு எதிரானவர் என்ற குற்றச்சாட்டு அவரது டிவிட்டர் வசனங்களில் இருந்து வருகிறது. என் தனிப்பட்ட வாழ்வில் பிரமணரல்லாத எத்தனையோ மத்திய சாதியினர் இட ஒதுக்கீட்டுக்கு எதிராகப் பேசியதைக் கேட்டுள்ளேன். அதாவது இவர்கள் ஒரு காலத்தில் தாழ்த்தப்பட்டவர்களாக இருந்து பின்னர் கடும் உழைப்பு மற்றும் பிற காரணிகளால் முன்னேறி மேற்தட்டை அடைந்தவர்கள். இன்று அவர்கள் தமக்கு கீழ் உள்ள சமூகத்தினர் இடஒதுக்கீடு பெறுவதை எதிர்க்கிறார்கள். நான் சொல்ல விரும்புவது இடஒதுக்கீடு எதிர்ப்பு விவகாரத்தில் சின்மயி உள்ளிட்ட பிராமணர்களுடன் உயர் மத்திய, மத்திய சாதிகளும் நிச்சயம் கைகோர்க்கிறார்கள் என்பது தான். இந்தப் பிரச்சினையை பிராமணர் versus தாழ்த்தப்பட்டவர் என்று பார்த்தோமானால் நம்மை விட முட்டாள் வேறு யாரும் இருக்க முடியாது.

பிராந்திய அரசியலுக்கு நெருக்கடி வந்தபோது பெரியார் திராவிடவாதத்தை முன்னெடுத்தார். ஆனால் இப்போது வடநாட்டவர் - தென்நாட்டவர் என்கிற முரண் அரசியல் பிராந்திய சமூகங்களின் வளர்ச்சியால் மெல்ல மெல்ல சமகாலத்தேவையை இழந்து வருகிறது. அதனால்தான் இன்றைய தமிழ்தேசியவாதிகள் ஈழத்தமிழர் பிரச்சினையை முன்னெடுத்து அதைக்கொண்டு சாதி கடந்த ஒரு தமிழ்தேசிய சமூகத்தைக் கட்டமைக்க முயல்கிறார்கள். தமது எதிரிகளாக சிங்களவர்களையும் வடநாட்டினரையும் வெளிநாட்டு காங்கிரஸ் தலைவியையும் முன்வைக்கிறார்கள். ஆனால் விடுதலைப்புலிகளின் வெள்ளாள, இந்துத்துவ அரசியலைக் கேள்விக்குள்ளாக்கும் போது அவர்கள் 'நம்மைப் பிரிக்கப் பார்க்கிறார்கள்' என கூச்சலிடுகிறார்கள். ராஜன்லீக்ஸ் கூட அவரது பிளாக்பதிவு ஒன்றில் இதே தொனியில் உள்சாதிய அரசியலைப் பேசுவதைத் தவிர்க்க வேண்டுகிறார். இது ஒரு போர்த் தந்திரம் மட்டுமே. பொதுவாக உள்நாட் டுக் குழப்பங்கள் விளையும்போது சர்வாதிகாரிகள் வெளிநாட்டுப் பொதுவிரோ தியைக் கட்டமைத்து உள்விரோதங்களை முடக்கி ஒற்றுமையை உருவாக்கப் பார்ப்பார்கள். ஒரு பிரச்சினையைப் பேசாமல் தவிர்ப்பது அதை தக்கவைக்கத்தான். இவ்விவகாரத்தில் ராஜன், சரவணகுமாரும் ஒரே ஆதிக்க சாதிய அரசியலைத்தான் பேசுகிறார்கள்.

ராஜன் உள்ளிட்டோர் தமிழ்தேசியவாதி என்கிற அடையாளத்தில் நின்றுதான் சின்மயியின் மேல்சாதிய மன நிலையை எதிர்ப்பதாய் கூறுகிறார்கள். தமிழ்தேசியவாதிகள் என்பவர்கள் தமிழகத்தின் வேறு சாதிய (தமது மத்திய சாதிகளின் ஆதிக்க நோக்கம் உட்பட்ட) கோளாறுகளைப் பொதுவில் விவாதிக்க வேண்டிய சூழல் இன்று தேவையிருக்கும்போது அவர்கள் மீண்டும் ஒரு 'அகண்ட தமிழ்பாரத' ஒற்றை அடையாளத்தை நிறுவி தப்பிக்கப் பார்க்கிறார்கள். ஆனால் பெரியாரின் சித்தாந்த கட்டமைப்பை போல் அல்லாமல் இது போலியாக உள்ளது. உங்கள் சொந்த மாநில மக்கள் பொலிஸால் சுட்டுக் கொல்லப்படும் போது, தாமிரபரணி-யில் மிதித்துக் கொல்லப்பட்டபோது, எரித்து அழிக்கப்பட்ட போது பேரணி நடத்தாத நீங்கள் இலங்கைத் தமிழர்களுக்காக இராப்பகலாகப் பிரசார வேலைகளில் ஈடுபடுவது, கண்ணீர் வடிப்பது, முகநூல் போராட்டங்கள் நடத்துவது, இணைய கையெழுத்து இயக்கம் நடத்துவது மத்திய சாதி பாசாங்கு இல்லாமல் வேறு என்ன? ஈழத்தமிழர்களுக்கு நடந்தது மிகப்பெரிய அநீதி என்றாலும் அதை முன்னிட்டு இங்கு நிகழ்வது ஒரு பெரும் போலி மத்திய சாதி இயக்கம் மட்டுமே. ஐம்பது வருடங்களுக்கு முன் திராவிட இனப்போருக்காக சமூகங்கள் ஒன்று திரண்டது போல் இம்முறை நிகழவில்லை. பொதுமக்கள் தமிழ்தேசியவாதத்தை முழுக்க நிராகரித்து விட்டார்கள் என்பதைத் தேர்தல் முடிவுகளில் துல்லியமாகத் தெரிந்தது.

பிராமணீயம் என்பது சாதி மனநிலை அல்ல, அனைத்து சாதியினருக்குள்ளும் இருக்கும் மன நிலை என்று தமிழவன் ஒருமுறை சொன்னதை நினைவுபடுத்துகிறேன். என்னைப் பொறுத்தவரை சின்மயியும் ராஜன் லீக்ஸும் சரிசமமாக மீன-வர், பறையர், பள்ளர் என பல தாழ்த்தப்பட்ட சமூகங்களுக்கும் எதிரானவர்களே. ஒரே வித்தியாசம், ராஜன் லீக்ஸ் போன்றவர்கள் தமிழ்தேசிய அடையாளம் மூலம் அந்தக் குறுகின மனப்பான்மையைக் கடந்து செல்வதாக பாவனை செய்கிறார்கள் என்பதுதான்.

நாம் நமது சாதிய அடையாளங்களால் பிளவுபட்டுத்தான் இருக்க வேண்டுமா என கேட்கலாம். முதலில் சாதிய பிளவுகளை ஏற்றுக்கொண்டு நமக்குள் உள்ள தீமைகளை எதிர்கொள்ள முன்வர வேண்டும். பி.ஜே.பியின் அகண்ட பாரதம் அளவுக்கு நம்மவர்களின் தமிழ்தேசியமும் ஒரு பிரிவினரின் ஆதிக்கவாத அஜெண்டாவைக் கொண்டது தான் இரண்டுமே போலியான கனவுகள்தாம்.

மத்திய சாதிகளை ஒருங்கிணைக்கும் முயற்சிகள் இனி வேறு சாதிகளை ஒடுக்கும் ஒரு சமுதாயத் தீமையாகப் பார்க்கப்பட வேண்டும். அது ஈழத்தமிழரை முன்னிட்டே நடந்தாலும் சரி! அதுவே இனி நடைமுறை நிதர்சனம். அதற்கு ஒரு உதாரணம் பார்ப்போம்.

இதுவரை ஐநூறுக்கு மேல் தமிழ் மீனவர்கள் இலங்கை இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். தமிழர்கள் மத்திய அமைச்சரவையில் இருந்தார்கள். கூட்டணிக் குடுமியைக் கையில் வைத்திருந்தார்கள். ஆனாலும் இலங்கை மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவோ கொலைகளைத் தடுக்கவோ நம்மால் முடியவில்லை. ஆனால் கேரள மீனவர்கள் இருவரைச் சுட்டுக் கொன்றதற்கு இத்தாலியக் கப்பற்படை அதிகாரிகளை கைது செய்து வழக்கு தொடுத்திருக்கிறார்கள். இத்தாலி மட்டும் நமக்குப் பகை நாடா? இல்லை. கேரள அரசியல்வாதிகள் இதை மீனவ சாதியின் பிரச்சினையாகக் கருதவில்லை. கேரள சமூகமும் மீடியாவும் இது ஒட்டுமொத்த சமூக அநீதியாகப் பார்த்து எதிர்த்தது. ஏ.கே.அந்தோனி சோனியாவுக்கு நெருக்கமானவர்தான். ஆனால் அவர் கடுமையாக இந்த கொலைகளை எதிர்த்தார். அந்தளவுக்கு அவருக்கு நெருக்கடி வழங்க கேரள சமூகத்தால் முடிந்தது. நம்மால் ஏன் முடியவில்லை? சாதிய மன நிலை தான் காரணம். மீனவர்கள் இறந்தால் அது ஒரு குறிப்பிட்ட சாதியின் இழப்பாகத்தான் பொதுநீரோட்ட சமூகத்தால் இங்கு பார்க்கப்படுகிறது. கூடங்குளம் போராட்டம் கூட மீனவ சமூகத்தினரை ஒருங்கிணைத்து தானே வலுவாக நடத்துகிறார்கள். இப்போராட்டத்தில் அவர்களைத் தவிர பிற ஆதிக்க சமூகத்தினர் நேரடியாக பெரும் எண்ணிக்கையில் கலந்து கொள்கிறார்களா? இல்லை. மீனவர்கள் இறந்ததற்குப் பதில் ஐநூறு முக்குலத்தோர் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தால் இப்பிரச்சினையின் அரசியல் பரிமாணமே வேறாக இருந்திருக்கும். இங்கு பெரும் போராட்டங்கள் வெடித்திருக்கும். இதுதான் தமிழகத்தின் நிதர்சனம்.

மொழி, இன அரசியலை மட்டுமே பேசுகிறவர்களின் கண்ணுக்கு வேறு மக்கள் பிரச்சினைகளே தெரியாது. சமூகப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நாம் இந்த ஒற்றை செயற்திட்டக்காரர்களை எதிர்க்க வேண்டும். இன்று சின்மயியின் பார்ப்பனியத்தை எதிர்க்கிறோம் என்ற பெயரில் கிளம்பியிருப்பவர்கள் மீண்டும் பிரா-மணர் - பிராமணரல்லாதோர் என்கிற ஒற்றைக் கட்டமைப்பைக் கொண்டு மீண்டும் அசலான பிரச்சினைகளை மூடி மறைக்கப் பார்க்கிறார்கள்.

நாம் பிளவுபட்டவர்களாக இருப்பதற்கு சாதியம் மட்டுமல்ல, சாதியத்தை வசதியாக வாழ வைக்கும் போலி சாதிய எதிர்ப்பரசியலான பிராந்திய அடையாள அரசியலும்தான் பிரதான காரணம். நமக்குத் தேவை பிராந்திய அடையாள அரசியலைக் கடந்த கம்யூனிஸத்தைப் போன்ற ஒரு மனவிரிவைத் தரும் ஒரு பண்பாட்டு அரசியல் இயக்கம்.

இதுவரை குறுகின மனப்பான்மையுடன் ஒற்றை செயல்திட்டத்துடன் இயங்கி வந்த குழுக்களான சிறுபத்திரிகையாளர்கள், அறிவுஜீவுகள், தமிழ்தேசியவாதிகள், திராவிட அரசியல் அபிமானிகள், சாதிய அபிமானிகள், வலதுசாரிகள் ஆகியோர்தான் மிக அதிகமாக சர்ச்சை என்ற பெயரில் அவதூறு பரப்புபவர்கள்.



**இப்போது வடநாட்டவர், தென்னாட்டவர் என்கிற முரண் அரசியல் பிராந்திய சமூகங்களின் வளர்ச்சியால் மெல்ல மெல்ல சமகாலத்தேவையை இழந்து வருகிறது. அதனால்தான் இன்றைய தமிழ்தேசியவாதிகள் ஈழத்தமிழர் பிரச்சினையை முன்னெடுத்து அதைக்கொண்டு சாதி கடந்த ஒரு தமிழ்தேசிய சமூகத்தைக் கட்டமைக்க முயல்கிறார்கள். தமது எதிரிகளாக சிங்களவர்களையும் வடநாட்டினரையும் வெளிநாட்டு காங்கிரஸ் தலைவியையும் முன்வைக்கிறார்கள்.**

(17ஆம் பக்கம் பார்க்க)

# கே.பி.யிடம் இரண்டு நாட்கள் விசாரணை நடத்திய சி.பி.ஐ



(கொழும்பு)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டு 21 வருடங்கள் கடந்திருக்கும் நிலையில் இந்தியாவின் பிரதான புலனாய்வு நிறுவனமான சி.பி.ஐ. அதிகாரிகள் கொழும்பு வந்து விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் சரவதேசப் பொறுப்பாளர் கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதனை விசாரணைக்கு உட்படுத்தியதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ராஜீவ் காந்தியின் படுகொலையின் பின்னணியில் இருந்திருக்கக்கூடிய சதி முயற்சிகள் தொடர்பில் விசாரணைகளை நடத்திவரும் சி.பி.ஐ. அதிகாரிகள் அதன் ஒருபகுதியாகவே கே.பி.யை விசாரணைக்கு உள்ளாக்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கொழும்பில் இரண்டு நாட்கள் இந்த விசாரணை இடம் பெற்றதாகவும், இலங்கை அரசாங்கம் இதற்கான அனுமதியை வழங்கியதாகவும் தெரிய வந்திருக்கின்றது.

ராஜீவ் காந்தி கொலையின் பின்னணியில் இருந்திருக்கக் கூடிய திட்டங்கள் தொடர்பாக இந்த விசாரணையின்போது கே.பி. தகவல் விளக்கியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ராஜுவ் கொலையில் முக்கியமான ஒரு பங்கு கே.பி.க்கு இருக்கலாம் எனக் கருதும் சி.பி.ஐ. அதிகாரிகள், இந்தக் கொலைத் திட்டம் பற்றி அவர் முழுமையாக அறிந்திருக்கலாம் எனவும் நம்புகின்றார்கள்.

கே.பி. மீதான விசாரணைகளைப் பூர்த்திசெய்துகொண்ட பின்னர் அவர் தொடர்பில் மலேசியா மற்றும் இலங்கை அதிகாரிகளிடம் மேலதிக தகவலகளை சி.பி.ஐ. அதிகாரிகள் கேட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரதான ஆயுதக்கொள்வனவாளராகவும், சர்வதேசப் பொறுப்பாளராகவும் பணிபுரிந்த கே.பி., போர் முடிவுக்கு வந்த பின்னர் மலேசியாவில் தங்கியிருந்த நிலையில் இலங்கை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டார்.

தற்போது அரசுடன் இணைநது செயற்படும் அவர், கிளிநொச்சியில் தனது அலுவலகத்தையும் அமைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வீதி அபிவிருத்திக்கு சவுதி நிதி உதவி



(கொழும்பு)

இலங்கையில் வீதி அபிவிருத்தி வேலைத்திட்டதை மேற்கொள்வதற்காக சவுதி அரேபிய அரசாங்கம் இலங்கைக்கு சுமார் 60 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.


இலங்கை வந்துள்ள சவுதி அரேபிய நிதி அமைச்சரும் அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தின் பணிப்பாளர் சபையின் தலைவருமான போராசிரியர் இப்ராகிம் அல் அசாப் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினார்.

இரு நாடுகளுக்கும் இடையில் இந்த உதவி தொடர்பில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது

சவுதி அரேபிய நிதி அமைச்சரும் அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தின் பணிப்பாளர் சபையின் தலைவருமான போராசிரியர் இப்ராகிம் அல் அசாப் மற்றும் சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம ஆகியோர் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்நிகழ்வில் அமைச்சர் றிசாட் பதியுதீன், பிரதி அமைச்சர் நிர்மல் கொத்தலாவல, இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர், திறைசேரி செயலாளர் பி.பி.ஜயசுந்தர ஆகியோர் உட்பட முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

# அவுஸ்ரேலிய புகலிடதாரி தற்கொலைக்கு முயற்சி



(கொழும்பு)

அவுஸ்ரேலியாவில் புக லிடம் கோரி வந்திருந்த இலங்கைத் தமிழர் ஒருவர் நாடு கடத்தப்படவிருந்த நிலையில் அதிகாலை தற்கொலை முயற்சியில் இறங்கியதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனையடுத்து அவரை நாடு கடத்துவதற்கு அவுஸ்ரேலிய நீதிமன்றம் இடைகாலத் தடை விதித்துள்ளது.

தன்னைத்தானே காயப்படுத்தி தற்கொலைக்கு அவர் முயற்சித் ததையடுத்து அவர் அவசர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். இருந்தபோதிலும் அவருக்கு பாரதூரமான காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தால் இலங்கைத் தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டுளள தடுப்புக் காவல் நிலையத்தில் பதற்ற நிலை காணப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புகலிடம் கோரி அவுஸ்ரேலியாவுக்கு சட்டவிரோதமான முறையில் பட கொன்றில் வந்திருந்த 42 வய தான தமிழர் ஒருவரே இன்று அதி காலை 5.00 மணியளவில் தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட தாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனையடுத்து அவர் அவசரமாக மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு அவரது உயிர் பாதுகாக்கப்பட்டது.

இவரை நாடு கடத்துவதற்கான உத்தரவு ஒரு மாதத்துக்கு முன்னரே பிறப்பிக்கப்பட்டிருந்தது. இதற்கு எதிராக அவர் தாக்கல் செய்திருந்த மேன்முறையீடு நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்ட நிலையிலேயே மெல்பேன் மேற்குப் பகுதியிலுள்ள தடுப்பக்காவல் நிலையத்தில் அவர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது

# நிலம் புயலில் சிக்குண்ட வியட்நாம் கப்பல் மூழ்கியது

## மூவர் மாயம்; 19 பேர் மீட்பு

(கொழும்பு)

நிலம் புயலில் சிக்கிய வியடனாமுக்குச் சொந்தமான சரக்குக் கபபலொன்று இலங்கை கடற்பரபபில் மூழ்கி விபத்துக்குள்ளாகியது.

இதில் 22 பேர் பயணித்த நிலையில் கப்பலின் தலைவன் உள்ளிட்ட 3 மாலுமிகள் காணாமற் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மியன்மாரில் இருந்து இந்தியாவுக்கு 6500 தொன் மரம் ஏற்றிச்சென்ற சாய்கோன் குயீன் எனற சரக்குக் கப்பலே இலங்கை கடற்பரப்பில் மூழ்கியுள்ளது.

நேற்றுமுன்தினம் அதிகாலை



12.15 மணியளவில், இலங்கை கடற் பரப்பில் பயணம் செய்து கொணடி ருந்தபோது, ஆபத்தில் சிக்கி யுள்ளதாக இந்தக் கப்பலிலிருந்து உதவி கோரி அழைபபு விடுக்கப்பட்டது.

நிலம் புயலில் சிக்கியதால், இந்தக் கப்பலுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டதாக கூறபபட்டுள்ளது. இதையடுத்து இலங்கை, அமெரிக்க கடைலோரக் காவல்படை மற்றும் கப்பல்களின் உதவியுடன் தேடுதல் நடத்தப்பட்டது. நேற்றுமுன்தினம் 9.20 மணியளவில், கிரேகக கப்பல் ஒன்று 3 மாலுமிகளை மீட்டது. மற்றொரு மிதவைப்படகிலிருந்து 16 மாலுமிகள் மீட்கப்பட்டுள்ளனர். மூன்று மாலுமிகள் இன்னமும் கண்டுபிடிக்கபபடவில்லை.

# சீனத் தயாரிப்பு ஆட்லறிகள் புலிகளுக்கு கிடைத்தது எப்படி?

## விசாரணை நடத்தும் இராணுவம்

(கொழும்பு)

முளளிவாய்க்கால் கடற்கரையில் நேற்றுமுன்தினம் கண்டுபிடிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் 5 ஆட்லறிகள் சீனத் தயாரிப்புக்கள் என உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆட்லறிகள் விடுதலைப் புலிகளின் கைக்கு எவ்வாறு கிடைத்தன எனபது குறித்து இராணுவம் அதிர்ச்சியடைந்துள்ளது.

நீலம் புயலினால் ஏற்பட்ட மண்அரிப்பை அடுத்து, விடுதலைப் புலிகளால் கரையோரத்தில் புதைத்து வைக்கப்பட்ட 5 ஆட்லறிகளை இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் மீட்டுள்ளனர்.

இவை அனைத்தும் சீனாவில் தயாரிக்கப்பட்டவை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இறுதிப்போரின் போது விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்பட்டதாக கருதப்படும் இந்த ஆட்லறிகள் மூன்றரை ஆண்டுகளாக கண்டுபிடிக்கப்படாதது குறித்து இராணுவத் தரப்பு அதிர்ச்சியடைந்துள்ளது.

போர் முடிவுக்கு வந்த பின்னர், முள்ளிவாய்க்காலில் படையினர் 3 ஆண்டுகளாக தொடர் தேடுதல்களை நடத்தியிருந்தனர்.

நீலம் புயலினால், காட்டிக் கொடுக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ள இந்த ஆட்லறிகள் விடுதலைப் புலிகளின் கைக்கு எவ்வாறு கிடைத்தன என்ற விசாரணையை இராணுவத்தரப்பு ஆரம்பித்துள்ளது.

இவை விடுதலைப் புலிகளால் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவையா அல்லது இராணுவத் தினரிடம் இருந்து கைப்பற்றப்பட்டவையா என்று கண்டறிய விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அதேவேளை, முதல்முறையாக ஒரே தடவையில் விடுதலைப் புலிகளின் 5 ஆட்லறிகளை கைப்பற்றியுள்ள இராணுவத்தினர் அந்தப் பகுதியில் தேடுதல்களை தீவிரப்படுத்தியுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

# ஊழியர் சேமலாப நிதி மனு ஆதாரம் சமர்ப்பிக்க உத்தரவு

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதி முதலீடு தொடர்பில் தாக்கல் செய்யபபட்ட அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கை விசாரணைக்கு ஏற்பதற்கான ஆதாரங்களை டிசம்பர் 31 ஆம் திகதி மன்றுக்கு சமர்ப்பிக்குமாறு உயர்நீதிமன்றம் அறிவித்தது.

ஊழியர் சேமலாப நிதியம் வெளிப்படைத் தன்மையின்றி உறுதிப்பாடு இல்லாத நிறுவனங்களில் சந்தேகத்துக்கிடமான முறையில் முதலீடு செய்துள்ளதாக குற்றஞ்சாட்டி 11 தொழிற்சங்கங்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவை ஆராய்நத போதே நீதிமன்றம் மேற்கண்டவாறு அறிவித்தது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தலைமையிலான நீதியரசர்களான கே.ஸ்ரீ பவான், அமரதுங்க ஆகியோர் இந்த மனுவை ஆராய்ந்தபோதே ஆதாரங்களைக் காட்டுவதற்கான திகதியை நிர்ணயித்தனர்.

# வலி.மேற்கு பிரதேச மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

மக்களுக்கு துன்பம் விளைவிக்கும் பிரதேச சபைவீதிகளை பிரதேசசபை புனரமைக்க வேண்டும் என வலி.மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழு வலிகாமம் மேற்கு பிரதேச சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நேற்று முன்தினம் வலி.மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள் பிரதேச வீதிகள் மக்களுக்கு ஏற்படுத்தும் அசௌகரியங்கள் குறித்து பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத்தலைவரான ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமாரின் கவனத்திற்கு கொண்டு வந்ததுடன், கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பாக தொடர் அழுத்தங்களையும் பிரயோகித்தனர் இதைத் தொடர்ந்து பிரதேச ஒருங்கிணைப்புக்குழு ஏகமனதாக குறித்த தீர்மானத்ததை எடுத்தது.

இது தொடர்பாக ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரால் பிரதேசசபைக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளில்,

வலிகாமம்மேற்கு பிரதேச சபைக்குச் சொந்தமான வீதிகளைப் புனரமைப்பதற்கு நெல்சிப் திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே குறித்த நிதியைப் பயன்படுத்தி மக்களுக்கு பெரும் சிரமங்களை ஏற்படுத்தும் வீதிகளைப் புனரமைக்க பிரதேசசபை நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்தோடு இச்செயற்பாட்டின் போது வீதிகளின் தெரிவுகள் சரியானதாகவும் அனைத்துமக்களும் பயன் பெறக்கூடிய வகையிலும் அமைய வேண்டும். இத்தீர்மானத்தை பிரதேச ஒருங்கிணைப்புக்குழு ஏகமனதாக நிறைவேற்றி பிரதேச சபைக்கு வேண்டுகோளையும் விடுத்தது.


குறித்த பிரதேசசெயலக மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள், தேவைகள் குறித்து விரிவாக ஆராயப்படது. அதாவது பாதுகாப்பு, மின்சாரம், சுகாதாரம், கூட்டுறவு, மீன்பிடி, விவசாயம், கல்வி, வீதி அபிவிருத்தி போன்ற விடயங்கள் குறித்து தனித்தனியாகவும் விரிவாகவும் ஆராயப்பட்டன. இவற்றில் தொடர் நடவடிக்கைக்கு உட்படுத்தாத விடயங்கள் இனங்காணப்பட்டு அவற்றை விரைவாக நடைமுறைப்படுத்துமாறும் நாடாளுமன்ற உறுப்பினரால் உரிய அதிகாரிகளுக்கு பணிப்பு விடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் சங்கானை பிரதேசத்தில் மது பாவனையாளர்களின் தொகை அதிகரிப்பது தொடர்பாகவும் அவர்கள் மக்களுக்கு ஏற்படுத்தும் அசௌகரியங்கள் தொடர்பாகவும் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர், இதைக்கட்டுப்படுத்த சட்டங்களும் பொலிஸாரும் செயற்பட்டு வருகின்ற போதும், மக்களின் விழிப்புணர்வே முக்கியமானதெனவும் குறிப்பிட்டார் அத்தோடு சட்ட ரீதியாக இயங்கும் மதுபானசாலைகளை நிறுத்த முடியாதெனவும் புதிய அனுமதிகளை வழங்குவதில் இறுக்கமான நடைமுறைகள் பின்பற்றப்படுவதாகவும் தெரவித்தார்.

மேலும் மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் வகையில் ஒலிபெருக்கிகளை பயன்படுத்துவதிலும் சட்ட வரையறைக்குட்பட்ட வகையில் செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் வலிகாமம்மேற்கு பிரதேசசெயலர் சோதிநாதன், வலிகாமம் மேற்கு பிரதேசசபை உறுப்பினர் பாலகிருஸ்ணன் (ஜீவன்), வலிகாமம் மேற்கு பிரதேசசெயலக உதவித்திட்டப்பணிப்பாளர் சிவகுமார், வலி. மேற்கு பிரதேச சபையின் செயலாளர்திருமதி சாரதாதேவி ஆகியோரும் திணைக்களங்களின் தலைவர்களும், அலுவலர்களும், கிராமமட்டஅமைப்புக்களின் பிரதிநிதிகளும், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.



யாழ்ப்பாணம் - மடத்தடியில் அமைந்துள்ள தண்ணர்த்தாங்கியில வெடிப்புகள் தோன்ற ஆரம்பித்துள்ளன. இந்த வெடிப்புக்கள் 4 மாதங்களுக்கு முன்பே ஆரம்பித்து விட்டதாகவும், தற்போது அவை சற்று கூடி இருப்பதாகவும், உள்ளே இருக்கும் கம்பிகள் தெரியுமளவுக்கு அவை பெருத்து விட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (20)

# தலைமைத்துவக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கான தலைமைத்துவக் கருத்தரங்கு இன்று, நாளை, நாளைமறுதினம் ஆகிய மூன்றுதினங்களில் மாலை 5.00 மணிக்கு யாழ். இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இளைஞர்சேவை மாவட்ட அதிகாரி திருமதி விநோதினி ஸ்ரீமேனன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப்பணிப்பாளர் வி.செல்வராசா, சிறப்புவிருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன், தேசிய இளைஞர் சேவை மன்ற வடமாகாண பணிப்பாளர் சரத் சந்திரபாலா, கௌரவ விருந்தினராக தேசிய இளைஞர் சேவை மன்ற யாழ். உதவிப்பணிப்பாளர் ரி.ஈஸ்வரராஜா, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி உப அதிபர் அருட்தந்தை ரி.பி.ரெஜிகுமார் அடிகளார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (93)

## திறப்பு விழா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கோப்சிற்றி எதிர்வரும் 6ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

வணிகத்துறை அமைச்சர் ரிசாட் பதியூதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இதனைத் திறந்து வைக்கவுள்ளார். (04)

## தூர்ந்து விழுந்தது கட்டுக் கிணறு

ஒருவாரமாக தொடர்ந்து நீடித்த அடை மழை காரணமாக புதுக்குடியிருப்பு - கோம்பாவில் பகுதியில் கட்டுக்கிணறு ஒன்று தூர்ந்து விழுந்துள்ளது.

கோம்பாவில் - துர்க்கை அம்மன் கோயிலுக்கு அருகாமையில் உள்ள பேபி என்பவருடைய வீட்டுக்கிணறே இவ்வாறு தூர்ந்து விழுந்துள்ளதோடு, சமீபத்தில்தான் இக்கிணறு கட்டி முடிக்கப்பட்டது. இதேவேளை தூர்ந்து விழுந்துள்ள கிணற்றின் ஆழமானது 34 முழம் என்பது குறிப்பிடத்தக்கது. (138)

# நீர் வழிந்தோட முடியாத நிலை; வயல் நிலங்களில் வெள்ளம்



கடந்த சில தினங்களாக பெய்த கனமழை காரணமாக வடமராட்சி நுகவல், உச்சில்கிராய் மற்றும் கப்பூது கிராமங்களில் உள்ள வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இக்கிராமங்களில் உள்ள வாய்க்கால்கள் புனரமைக்கப்பட்டும் நீர் வழிந்தோட முடியாத நிலை ஏற்பட்டதாலேயே வெள்ளநீர் வயல் நிலங்களைச் சூழ்ந்துள்ளதாகவும், நெற்கதிர்கள் வளர்ந்து வரும் நிலையில் வெள்ளம் மூழ்கியுள்ளதால் பயிர் அழியும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வெள்ள நீர் வழிந்தோடக்கூடிய வகையில் முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால், தாம் நஷ்டத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது என அவர்கள் தெரிவிக்கின்றனர். (18)

# முரசின் இன்றைய பலன்

(02.11.2012 - வெள்ளிக்கிழமை)

நந்தன வருஷம் ஐப்பசி மாதம் 17 ஆம் திகதி. நட்சத்திரம் ரோகிணி.
மரணயோகம். முற்பகல் 10.49 வரை. திதி திருதியை முற்பகல் 7.40 வரை.
இராகுகாலம் 10.34 - 12.04 வரை. சுபநேரம் 6.04 - 7.34 வரை.
எமகண்டம் 3.04 - 4.34 வரை, குளிகன் காலம் 7.34 - 9.04 வரை.
சங்கடஹர சதுர்த்தி விரதம். கேதாரகௌரி விரத 10 ஆவது நாள்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | செலவுகளைக் குறைக்க திணறுவீர்கள். வளைந்து கொடுப்பது நல்லது. இலாபம் மந்தம். மற்றவர்களின் வேலையும் சேர்ந்த சுமை. வாதம் வேண்டாம். |
| ரிஷபம் | அடுத்தவர் நலனில் அக்கறை. கூடுதல் உழைப்புக்கு பலன். போக்குவரத்தில் கவனம். சேமிப்பு செலவாகும். வெளியூர் பயணத்தால் ஆதாயம். |
| மிதுனம் | அலைச்சலும் சோர்வும். உறவினர், நண்பர்களுடன் நெருடல்கள் வந்து நீங்கும். திடீர் பயணம். அதிரடி சலுகைகள் மூலம் இலாபம் வரும். சிகிச்சை. |
| கடகம் | உங்களிடம் சிலர் அதிருப்தி. வாக்குவாதம் தவிர்க்கவும். தொழில்நிலை சீராகும். சராசரி பணவரவு. எதிர்பார்த்த சுபசெய்தி தாமதம். அதிக உழைப்பு. |
| சிம்மம் | உங்கள் வார்த்தைக்கு மதிப்பு. அரச அலுவல் நன்மையாகும். பிரபலங்கள் அறிமுகம். வழக்கில் திருப்பம். உபரி வருமானம். வேலையில் புது பொறுப்புகள். |
| கன்னி | சவாலில் வெற்றி. பழைய உறவினர், நண்பர்கள் சந்திப்பு. உதவிகள் கிடைக்கும். பயணம் இலாபம். அலுவலகத்தில் மரியாதை. |
| துலாம் | ஞாபக மறதி தொல்லை. குடும்ப சிக்கல் தீர்ப்பதில் நாள் செல்லும். வரவும் செலவும் சமமாகும். கடன் நேரும். உணவு கட்டுப்பாடு நல்லது. |
| விருச்சிகம் | கணவன் - மனைவி மனக்கசப்பு நீங்கும். எதிர்பார்த்த தொகை கைக்கு வரும். புது நண்பர்கள். தெய்வீக ஈடுபாடு. இலாப அதிகரிப்பு. புதிய முயற்சிகள். |
| தனுசு | அலைச்சல், டென்ஷன் யாவும் நீங்கும். குடும்பத்தில் நிம்மதி. உறவினர்களால் ஆதாயம். சக ஊழியர்கள் உதவி. அரசால் அனுகூலம். தேவைகள் பூர்த்தியாகும். |
| மகரம் | ஓய்வின்றிய உழைப்பு. விமர்சனங்களுக்கு பதற வேண்டாம். வேலையில் பிரச்சினைகள் வரக்கூடும். நாவடக்கம் தேவைப்படும். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசை. |
| கும்பம் | கடந்தகால நினைவு. பெற்றோரின் விருப்ப நிறைவேற்றம். விட்டுக் கொடுப்பீர்கள். சூழ்ச்சி முறியடிப்பீர்கள். அனுபவ அறிவு உதவும். எதிர்பாராத தன இலாபம. |
| மீனம் | திறமையை வெளிப்படுத்தும் வாய்ப்பு. சகோதர வகையில் நன்மை. கல்யாணப் பேச்சு. வாகன திருத்தம். புது முதலீடு. சக ஊழியர்கள் ஆதரவு. தன்னம்பிக்கை. |

# விபுலானந்தன் நினைவு கூடைப்பந்து

## யாழ். இந்து, திருக்குடும்ப கன்னியர் மடம் சம்பியன்



(யாழ்ப்பாணம்)

விபுலானந்தன்ஞாபகார்த்த கூடைப்பந்தாட்ட போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி, திருக்குடும்பக் கன்னியர் மட தேசியப் பாடசாலை அணிகள் சம்பியனாகின.

யாழ். மத்திய கல்லூரியினால் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட விபுலானந்தன் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டிகள் கடந்த வாரம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில், ஆண், பெண் என இரு பிரிவுகளாக போட்டிகள் நடைபெற்றன. இதில் பெண்கள் பிரிவின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் உடுவில்மகளிர் கல்லூரி அணியும், சுன்னாகம் இராமநாதன் கல்லூரி அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 56-45 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் யாழ். திருக்குடும்பக் கன்னியர் மட தேசிய பாடசாலை அணியும், பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அணியும் மோதவிருந்தன. இப்போட்டியில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அணி சமூகமளிக்காமையால் திருக்குடும்ப கன்னியர் மட தேசிய பாடசாலை அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

அந்த வகையில் இறுதிப் போட்டியில் திருக்குடும்ப கன்னியர் மட தேசியப் பாடசாலை அணியும்,உடுவில் மகளிர் கல்லூரி அணியும் மோதின. ஆட்டம் ஆரம்பமாகியதிலிருந்து திருக்குடும்ப கன்னியர் மட தேசியப் பாடசாலை அணியே ஆதிக்கம் செலுத்தியது. இறுதியில் 37-23 என்ற புள்ளிகள் அடிப்படையில் திருக்குடும்ப கன்னியர் மட தேசியப் பாடசாலை வெற்றிபெற்று சம்பியனாகியது. பெண்கள் பிரிவின் மூன்றாமிடத்தை சுன்னாகம் இராமநாதன் கல்லூரி அணி பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஆண்களுக்கான முதலாவது அரையிறுதிப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணியும், கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மோதின. இதில் இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் தமது ஆட்டத் திறனை வெளிப்படுத்தி ஆடினர். மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணி 58-49 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியும், யாழ். மத்திய கல்லூரி அணியும் மோதின. இப்போட்டியில் யாழ். மத்திய கல்லூரியின் ஆட்டம் வெகுசிறப்பாக இருந்தது. ஆரம்பம் முதலே அதன் ஆதிக்கமும், சிறப்பான பந்துப் பரிமாற்றமும் இரசிகர்களைக் கவரும் வகையில் இருந்தது. இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி 64-48 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணியும், யாழ். மத்திய கல்லூரி அணியும் மோதின. இரு அணிகளுமே பலம் வாய்ந்த அணி என்பதால் இப்போட்டி குறித்து பெரும் எதிர்பார்ப்பு இரசிகர்கள் மத்தியில் நிலவியது. இதற்கமைய இரு அணிகளுமே தமது உச்ச ஆட்டத் திறனை வெளிப்படுத்தி போட்டியில் தமது கைவரிசையைக் காட்டினர். இறுதியில் யாழ். இந்துக் கல்லூரி அணி 52-44 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

ஆண்கள் பிரிவில் மூன்றாமிடத்தை கொக்குவில் இந்துக் கல்லூரி அணி பிடித்துக் கொண்டது. இப்போட்டி நிகழ்வில் கல்விச் சமூகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள், விளையாட்டு ஆர்வலர்கள், இரசிகர்கள் எனப் பெருமளவிலானோர் கண்டுகளித்தமை குறிப்பிடத்தக்கது. (93)



யாழ். உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் பழைய மாணவர் விஞ்ஞானி கந்தையாவின் மகன் பீற்றர் கந்தையாவினால் யாழ். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆகியவற்றிற்கு ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டது.

# கால்டன் தேசிய மட்ட கூடைப்பந்து காலிறுதியில் யாழ். மாவட்டம்

(கொழும்பு)

கால்டன் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் அகில இலங்கை ரீதியிலான கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட ஆண்கள் அணி காலிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளது.

அகில இலங்கை ரீதியில் கால்டன் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் இக் கூடைப் பந்தாட்டப் போட்டி கொழும்பு பொலிஸ் விளையாட்டு அரங்கில் நடைபெற்று வருகின்றது.

ஆண்கள்,பெண்கள் என இரு பிரிவுகளாக நடைபெற்று வருகின்றது. இதில் ஆண்கள் பிரிவில் முதல் போட்டியில் கொழும்பு மருன்ஸ் அணியை எதிர்கொண்ட யாழ். மாவட்ட அணி மிகச் சிறப்பான முறையில் ஆடியது. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய யாழ். மாவட்ட அணி 77-58 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவ்து சுற்று ஆட்டத்தில் வோஷயன்ஸ் அணியும் யாழ். மாவட்ட அணியும் மோதியது. இப்போட்டியிலும் ஆரம்பம் முதலே யாழ். மாவட்ட அணி ஆதிக்கம் செலுத்தியது. இப்போட்டியிலும் 75-58 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்ற யாழ். மாவட்ட அணி காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

காலிறுதிப் போட்டிகள் எதிர்வரும் 16ஆம் திகதி நடைபெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (93)

# விரைவில்

## தேசிய மட்ட கராத்தே

(கொழும்பு)

தேசிய மட்ட கராத்தேப் போட்டி இந்த மாதம் நடுப்பகுதியில் கொழும்பில் நடைபெறவுள்ளதாக இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் கிடைக்கப்பெறும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு மாகாண போட்டிகள் அண்மையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றிருந்தநிலையில் தேசிய மட்டப் போட்டிக்கு வடக்கு மாகாண கராத்தே வீரர்கள் தயாராகியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இப்போட்டியில் அதிகளவி லான கராத்தே வீர,வீராங்கனைகள் பங்குகொள்ள வாய்ப்புள்ளதாகவும் அவ்வட்டாரம் மேலும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

# சங்கானைக் கோட்ட கால்பந்து முடிவுகள்

(சங்கானை)

சங்கானை கோட்ட்ப் பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்ட சுற்றுப்போட்டி சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வந்தது. இந்த சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு,

14 வயது பிரிவில் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி முதலிடத்தையும், யாழ்ப்பாண கல்லூரி இரண்டாமிடத்தையும், அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் மூன்றாமிடத்தையும் பெற்றன.

16 வயது பிரிவில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் முதலிடத்தையும், அராலி இந்துக் கல்லூரி இரண்டாமிடத்தையும், வட்டு இந்துக் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

18 வயது பிரிவில் வட்டு மத்திய கல்லூரி முதலிடத்தையும், விக்டோரியாக் கல்லூரி இரண்டாமிடத்தையும், வட்டு இந்துக் கல்லூரி மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன. (93)

# இரண்டாவது போட்டி நாளை

(நெல்லியடி)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணிக்கும், வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி அணிக்குமிடையிலான இரண்டாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி நாளைய தினம் நடைபெறவுள்ளது.

வடமராட்சி கல்வி வலய அணிகளுக்கிடையிலான மாபெரும் கிரிக்கெட் போட்டித் தொடர் ஒன்றை ஆண்டு தோறும் நடத்தும் முகமாக இப்போட்டி ஒழுங்கமைக்கப்பட்டது.

அந்த அடிப்படையில் இரண்டு போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடராக இப்போட்டி ஆரம்பமானது. இதில் முதலாவது ஒரு நாள் போட்டியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி அபார வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது. நாளைய தினம் நடைபெறவுள்ள இரண்டாவது போட்டிக்கு இரு அணி ஆதரவாளர்களையும் வருகை தந்து வீரர்களை உற்சாகப்படுத்துமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

# சச்சினுக்குப் பாராட்டு, ஹோலிக்கு விருது இந்திய கிரிக்கெட் சபையால் ஏற்பாடு



இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் விருது வழங்கும் விழாவில் சச்சின் டெண்டுல்கருக்கு பாராட்டும், விராட் ஹோலிக்கு விருதும் வழங்கி கௌரவப்படுத்தப்பட உள்ளது.

பி.சி.சி.ஐ விருது வழங்கும் விழா, மும்பையில் வருகிற 21 ஆம் திகதி நடக்கவுள்ளது. இவ்விழாவில் கிரிக்கெட்டில் சாதனை புரிந்தவர்கள் கௌரவப்படுத்தப்படுவர்.

இதில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் சதத்தில் சதமடித்த சச்சின் பாராட்டப்படுவதாக பி.சி.சி.ஐ. தெரிவித்துள்ளது.

அதே போல் 2012 - 2013 ஆம் ஆண்டுக்கான சர்வதேச கிரிக்கெட் சபையின் சிறந்த ஒரு நாள் கிரிக்கெட் வீரர் விருதைப் பெற்ற விராட் ஹோலிக்கு இவ்விழாவில் பாலி உம்ரிகர் விருதும் ரூ. 5 இலட்சத்துக்கான காசோலையும் அளிக்கப்படும் என்று பி.சி.சி.ஐ. தெரிவித்துள்ளது.

இவ்விருதை 2006, 2009 ஆம் ஆண்டுகளில் சச்சினும், 2007 ஆம் ஆண்டு ஷேவாக்கும், 2011 ஆம் ஆண்டில் ராவிட்டும் பெற்றனர். சமீபத்தில் ஓய்வு பெற்ற வி.வி.எஸ்.லட்சுமணன், இவ்விழாவில் கௌரவப்படுத்தப்படவுள்ளார்.

மேலும் முன்னாள் கிரிக்கெட் வீரர்களான விஜய் மர்ச்சென்ட், தாட்டு பாட்கர், விஜய் மஞ்ச் ரேக்கர, வினு மண்டக், குலாம் அகமது, எம்.எல்.ஜெய்சிம்மா, திலீப் சர்தேசாய் உள்ளிட் டோரும் கௌரவப்படுத்தப்பட உள்ளனர்.

இவர்களின் குழந்தைகளுக்கு கிண்ணமும், தலா ரூ. 15 இலட்சத்துக்கான காசோலையும் வழங்கப்படும் என்றும் பி.சி.சி.ஐ தெரிவித்துள்ளது.

# இருமல், ஜலதோஷத்தால் அவதிப்படுகிறார் டோனி




ரஞ்சி கிண்ண தொடருக்கான இந்திய அணியில் சச்சின், ஷேவாக், கம்பீர் உட்பட முன்னணி வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இருமல், ஜலதோஷத்தால் அவதிப்படுவதால் டோனி பங்கேற்கவில்லை.

இது குறித்து டோனி கூறுகையில், கடந்த ஆறு முதல் ஏழு ஆண்டுகளாக இந்திய அணிக்காக சர்வதேச போட்டிகளில் பங்கேற்று வருகிறேன்.

இம்முறை ஜார்க்கண்ட் கிரிக்கெட் சங்கம், முழு உடற் தகுதியுடன் இருக்கிறீர்களா எனக் கேட்டது. எனக்கு இருமல், ஜலதோஷம் இருப்பதால் ரஞ்சி போட்டிக்குத் தெரிவு செய்யவேண்டாம் எனக் கூறிவிட்டேன் என்றார்.

# ஜோகோவிச் அதிர்ச்சித் தோல்வி



பிரான்சில் நடந்து வரும் பாரிஸ் மாஸ்டர்ஸ் டென்னில் போட்டியின் 2 ஆவது சுற்றில் விரைவில் முதலிடத்தை பிடிக்க உள்ள செர்பியாவின் நோவக் ஜோகோவிச் அதிர்ச்சி தோல்வி அடைந்தார். அவரை 0-6, 7-6 (7-5), 6-4 என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் சேம் குயர்ரி தோற்கடித்தார்.

இது போன்று தொடக்க சுற்றிலேயே ஜோகோவிச் வெளியேறுவது 2010 ஆம் ஆண்டு மியாமி போட்டிக்கு பிறகு இதுவே முதல் முறையாகும்.






மும்பையில் நடந்த தனியார் நிகழ்ச்சியில், பொலிவுட் நடிகைகள் சோபியா சவுத்ரி, பிரித்தி ஜிந்தாவுடன் (வலது) உற்சாகமாக பங்கேற்ற இந்திய கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங்

# மும்பை இன்டியன்ஸ் அணியிலிருந்து நீக்கப்பட்டாரா ஹர்பஜன்?



(மும்பை)

மும்பை இன்டியன்ஸ் அணியிலிருந்து அணித் தலைவர் ஹர்பஜன் சிங் நீக்கப்படுவதாக தகவல் வெளியானது.

கடந்த 2011ஆம் ஆண்டில் இங்கிலாந்து சென்ற இந்திய அணியில் இருந்து ஹர்பஜன் சிங் (வயது - 32) நீக்கப்பட்டார்.

அந்த ஆண்டு சம்பியன்ஸ் லீக் தொடரில் மும்பை இன்டியன்ஸ் அணியின் தலைவராக இருந்து கிண்ணத்தை வென்று தந்தார்.

இருப்பினும் இந்திய அணியில் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டார். சமீபத்திய சம்பியன்ஸ் லீக் தொடரில், இவரது தலைமையில் ஒரு போட்டியில் கூட வெற்றி பெறவில்லை. இந்திய அணிக்கு மீண்டும் திரும்பும் முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்தது.

இதனிடையே 2013 ஆம் ஆண்டு ஐ.பி.எல் தொடரில் பங்கேற்கும் அணிகள், வீரர்கள் விவரத்தை நேற்றுமுன்தினம் மாலைக்குள் இறுதி செய்யுமாறு பணிக்கப்பட்டது.

இதனால் ஒவ்வொரு அணிகளும் தேவையற்ற வீரர்களை விடுவித்து வருகின்றன. புனே அணியில் இருந்து நியூசிலாந்தின் ரைடர் நீக்கப்பட்டார்.

தற்போது மும்பை அணியில் இருந்து ஹர்பஜன்சிங்கையும் நீக்கியுள்ளதாகச் செய்திகள் வெளியாகின.

ஆனால் இச்செய்திக்கு மறுப்பு தெரிவித்த ஐ.பி.எல் அதிகாரி ஒருவர் இது குறித்து கூறுகையில், இது முற்றிலும் அடிப்படையற்ற செய்தி. மும்பை அணியில்தான் ஹர் பஜன்சிங் நீடிக்கிறார். எதிர்காலததிலும் இருப்பார். இதில் எந்த சந்தேகமும் இல்லை என்றார்.

# இந்தியாவிற்கு டிசம்பரில் வருகிறது பாகிஸ்தான் அணி



(டில்லி)

வரும் டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி பாகிஸ்தான் அணி இந்தியாவிற்குச் சுற்றுப்பயணம் வர உள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர், 2 ருவெண்ரி 20 போட்டிகள் நடைபெறவுள்ளதாக தெரிகிறது.

ஆனால் போட்டிகள் நடைபெறும் இடம் மற்றும் திகதி ஆகியவை இன்னும் அறிவிக்கப்படவில்லை. டில்லி, கொல்கத்தா, சென்னை, பெங்களூர் மற்றும் அகமதாபாத் ஆகிய இடங்களில் உள்ள மைதானங்களில் போட்டிகள் நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது பாகிஸ்தான் அணியின் சுற்றுப்பயண திகதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இரு அணி கிரிக்கெட் வாரியங்களும் இது குறித்து ஆலோசனை நடத்த உள்ளதாகத் தெரிகிறது.

கடந்த 2007 ஆம் ஆண்டிற்கு பிறகு பாகிஸ்தான் அணி, இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளது குறிப்பிடத்தக்கது.

# முறைகேடான பந்துவீச்சு; மூன்றாவது நடுவர் பரிசீலனை

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் வீரர்களின் ஆட்டமிழப்புக்கு பின்னர் முறைகேடான பந்துவீச்சு தொடர்பாக மூன்றாவது நடுவர் பரீட்சிக்கவுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

புதிதாக அமுலுக்கு கொண்டு வரப்பட்ட கிரிக்கெட் விதிமுறைகளின் திருத்தங்களுக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் கள நடுவர்கள் கோரிக்கை விடுத்தால் மாத்திரமே முறைகேடான பந்து வீச்சு தொடர்பாக பரீட்சிக்கப்படும் முறைமை இதுவரை காலமும் பின்பற்றப்பட்டு வந்திருந்தது.

முறைகேடான பந்துவீச்சு மூலம் வீரர்கள் ஆட்டமிழக்கச் செய்யப்படும் பட்சத்தில் அது குறித்து கள நடுவர்களுக்கு, மூன்றாவது நடுவர் ஆலோசனை வழங்குவார் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

நேற்று ஆரம்பமான இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் தொடரிலும் இந்த முறைமை பின்பற்றப்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# 13 ஆவது திருத்தத்தை நீக்குவதற்கு அரசாங்கத் தரப்பிலிருந்தும் எதிர்ப்பு!

– எம்.எஸ்.எம். ஐயூப் கட்டுரையிலிருந்து.



மாகாண சபைகளை எதிர்ப்பதற்காக அச்சபைகளால் நாட்டுக்கு என்னதான் தீங்கு இழைக்கப்பட்டுள்ளது என்று கேள்வியெழுப்பலாம். மாகாண சபைகள் நாட்டு பிரிவினைக்கு இட்டுச் செல்கிறது என்று சில பேரினவாதத் தலைவர்கள் வாதிடலாம். ஆனால் அவ்வாறானோர் மறந்து விடும் ஒரு முக்கிய விடயம் என்னவென்றால் இலங்கையில் பிரிவினைவாதமானது மாகாண சபைகளோ அல்லது அவற்றுக்கு அடிப்படையாக அமைந்த அதிகார பரவலாக்கல் என்ற எண்ணக்கருவோ அறிமுகப்படுத்தடுவதற்கு முன்னரே உருவாகிய தொன்றாகும் என்பதே.

சரியாகக் கூறுவதாயின் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தமோ அல்லது மாகாண சபைகளோ பிரிவினைவாதத்தை கொண்டுவரவில்லை. மாறாக, பிரிவினைவாதம் தான் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தையும் அதன் மூலம் மாகாண சபைகளையும் கொண்டு வந்தது.

இலங்கையில் பிரிவினைவாதமானது 1970களில் தான் கவனத்திற்கொள்ளக் கூடிய வகையில் தோற்றம் பெற்றது. 1976ஆம் ஆண்டு மே மாதத்தில் தான் தமிழர் விடுதலை கூட்டணியின் வட்டுக்கோட்டை மாநாட்டின் போது அது உத்தியோகபூர்வமாக அரசியல் களத்திற்கு வந்தது.

இவ்வாறு களத்திற்கு வந்த பிரிவினைவாதத்திற்கு பரிகாரமாகவே இந்திய வெளியுறவுச் செயலாளர்களான ஜீ.பார்த்தசாரதி மற்றும் ரொமேஷ் பண்டாரி ஆகியோரின் தலையீட்டில் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன தலைமையிலான இலங்கை அரசாங்கம் 1980களின் ஆரம்பத்தில் அதிகாரப் பரவலாக்கல் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டது.

அதன் பிரகாரம் 1984ஆம் ஆண்டு நடைபெற்ற வட்ட மேசை மாநாட்டின் போதும் 1986ஆம் ஆண்டு நடைபெற்ற அரசியல் கட்சி மாநாட்டின் போதும் மாகாண சபைகளை அறிமுகப் படுத்துவது பற்றி ஆராயப் பட்டது. இறுதியில் வேறு சில பூகோள அரசியல் காரணங்களுக்காக இந்தியா பலாத்காரத்தை பாவித்து 1987ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் இலங்கை அரசாங்கம் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தையும் அதன் மூலம் மாகாண சபைகளையும் ஏற்றுக்கொள்ளச் செய்தது.

இது தான் வரலாறு. எனவே 13ஆவது அரசியலமைப்புத் திருத்தமோ அல்லது மாகாண சபைகளோ நாட்டுப் பிரிவினைக்கு இட்டுச் செல்கிறது என்று வாதிட முடியாது.

இப்போது 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பாக நாட்டில் ஏற்பட்டுள்ள விவாதம் அச்சட்டத் திருத்தம் நன்மையானது என்பதற்காகவோ அல்லது தீமையானது என்பதற்காகவோ ஏற்பட்டதல்ல. இது வேறு அரசியல் காரணங்களுக்காக உருவாக்கப்பட்ட ஒன்றாகும். குறிப்பாக திவிநெகும சட்டமூலத்தை நிறைவேற்றிக் கொள்ள மாகாண சபைகளின் அனுமதி வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியமையினால் ஏற்பட்ட நிலைமையாகும்.

எனினும் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை ரத்துச் செய்ய வேண்டும் என்று எழுப்பப்பட்ட கோஷத்தின் காரம் தற்போது குறைந்து வருகிறது. ஜனாதிபதியின் சகோதரர் என்ற காரணத்தினால் ஏறத்தாழ ஜனாதிபதியைப் போல் நடந்து கொள்ளும் அதேபோல் மக்களாலும் ஜனாதிபதியைப் போல் மதிக்கப்படும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தான் இம் முறை 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு எதிரான போரை ஆரம்பித்து வைத்தார். ஆனால் அந்தக் காரணத்தையும் மதியாது ஆளும் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை





எதிர்ப்பவர்களை எதிர்க்க முன்வந்துள்ளனர்.

அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ வித்தாரண மற்றும் டியூ குணசேகர போன்ற இடதுசாரிகள் ஆரம்பத்திலேயே 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு எதிரான கருத்துக்களை சாடி வந்தனர். இப்போது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களும் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு எதிரானவர்களை பொருட்படுத்தாததைப் போல் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

இவர்களில் முதலாவதாக அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல்ல 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை மாற்றியமைக்க அரசாங்கம் எவ்வித முடிவையும் எடுக்கவில்லை என்றார். அரசாங்கம் கோத்தாபய ராஜபக்ஷவின் கருத்தை ஏற்று 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கும் அறிகுறிகள் இருந்திருந்தால் ரமபுக்வெல்ல ஒருபோதும் அவ்வாறு கூறியிருக்க மாட்டார்.

அதனை அடுத்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேனவும் இதே கருத்தை வெளியிட்டு இருந்தார். சில வேளை சர்வதேச நெருக்குதல் 13ஆவது அரசியலமைப்புத்



திருத்தத்திற்கு எதிராக

அரசாங்கத்திற்குள் வளர்ந்து வந்த நிலைப்பாட்டை முடக்கியிருக்கலாம்.

இதற்கிடையே 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் சிற்பியான இந்திய அரசாங்கம் அத்திருத்தத்தை எதிர்த்து கருத்து வெளியிட்ட கோத்தாபய ராஜபக்ஷவை பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. ஆனால் கடந்த வாரத்தில் மேற்கொள்ளப்பட்ட அவரது இந்திய விஜயத்தின் போது 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் பற்றிய விடயம் ஆராயப்படவில்லை.

அது சரி தான். ஏனெனில் இலங்கையில் என்ன அந்தஸ்தில் அவர் இருந்தாலும் இந்தியாவுக்கு அவர் ஒரு அதிகாரி மட்டுமே. அதுவும் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த அதிகாரி மட்டுமே. அவரோடு இந்தியா அரசியல் விடயங்களை ஆராயப் போவதில்லை.

ஆனால் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு எதிராக அவர் கருத்து வெளியிட்ட உடன் அவர் இந்திய அதிகாரிகளை சந்திக்கப் போகிறார் என்ற உணர்வே அரசாங்கத்தை சிந்திக்கச் செய்திருக்க வேண்டும். எனவே தான் அமைச்சர்களான ரம்புக்வெல்லவும் சிறிசேனவும் "நாங்கள் அப்படி ஒன்றும் செய்யப் போவதில்லை" என்ற தோரணையில் கருத்து வெளியிட்டு இருக்கிறார்கள் போலும்.

## வாழ்க்கைத்துணை அறிதல்



வானத்தில் நட்சத்திரங்கள் உதிக்க ஆரம்பித்ததும் முதல் ஏழு நட்சத்திரங்களை மட்டும் தொடர்ந்து எண்ண வேண்டும். இப்படி ஏழு இரவுகள் எண்ணிவிட்டு, எட்டாவது நாள் எவருடன் முதலாவதாக கைகுலுக்க நேரிடுகிறதோ அவரே கணவர் அல்லது மனைவியாக அமைய வாய்ப்பு உண்டாம். இது சீனர்களின் நம்பிக்கை.

## காதிலே கவனம்!

வெப்பத்தை இத்தனை "டிகிரி" என்று சொல்வதுபோல ஒலியை "டெசிபல்" என்ற அலகால் அளந்து சொல்கிறார்கள். ஒருவரால் 80 டெசிபல் ஒலியைத்தான் பொறுத்துக் கொள்ள முடியும் என்கிறார்கள் காதொலி வல்லுநர்கள். ஒலி அந்த அளவைத் தாண்டும்போது "பேரொலி" என்றும் "ஒலி மாசு" என்றும் அழைக்கப்படுகிறது.

சாதாரணமாக நாம் பேசும் உரையாடல்களின் போது எழும் ஒலியின் அளவு 35 முதல் 55 டெசிபல் வரை உள்ளது. "கிசுகிசு"ப் பேச்சின் ஒலியின் அளவு 20 டெசிபல். அளவு மீறிய ஒலி நம் செவி, உடல், மனம் ஆகிய மூன்றையும் பாதிக்கிறது.

காதைப் பொறுத்தவரை பலமான ஒலி இருவகைப் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. வெளிக்காது, நடுக்காது ஆகியவை ஒலியால் பாதிக்கப்படும்போது தற்காலிகமாக கேட்கும் திறன் குறைகிறது. அது ஒரு வகை. உட்காதை ஒலி பிளக்கும்போது அங்குள்ள



நுட்பமான செல்கள் அழிகின்றன. அவை மீண்டும் உருவாவதில்லை! அதன் காரணமாக "டின்னிடஸ்" என்ற ஒருவித காது இரைச்சல் உண்டாகி ஆயுள் பூராவும் ஒரு வகைச் சித்திரவதைக்கு உள்ளாக்குகிறது. அது இரண்டாவது வகை பாதிப்பு.

மித மிஞ்சிய ஒலியை நெடுநேரம் கேட்போர் நிரந்தமாகக் கேட்கும் திறனை இழந்துவிடுகிறார்கள். ஒவ்வொரு தீபாவளிக்குப் பிறகும் வரும் நோயாளிகளில் 75 சதவீதத்தினர், அதிலும் குறிப்பாக இளம் வயதினர் முழுவதுமாகக் கேட்கும் திறன் இழப்புக்கு உள்ளாகிறார்கள். இப்படிக் கணிக்கிறார்கள் செவி மருத்துவ நிபுணர்கள். பலமான ஒலி இதயத்துடிப்பு, இரத்த அழுத்தம் ஆகியவற்றை அதிகப்படுத்துகிறது. "கொலஸ்ட்ரோல்" அளவைப் பெருக்கிக் குருதி ஓட்டத்திற்குக் குந்தகம் ஏற்படுத்துகிறது.

('நுனிப்புல்' நூலில் முனைவர் வெ. நல்லதம்பி)

# உலகத்தைத் தெரிந்து கொள்ள...



புத்தர் ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்தார்.

அப்போது அங்கு வந்த புத்தரின் முதன்மைச் சீடரான ஆனந்தன் அவரிடம், "குருவே, நான் இந்த உலகத்தைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். எப்படி?" என்று கேட்டார்.

புத்தர் அவரிடம், "இந்த மரத்தில் ஏறி குழைகளைப் பறித்து வா!" என்றார்.

ஆனந்தன் அந்த மரத்தின் மேல் ஏறி கை கொள்ளும் அளவுக்கு குழைகளைப் பறித்துக் கொண்டு கீழிறங்கி வந்தார்.

புத்தர் அவரைப் பார்த்து, "ஆனந்தா, இப்போது உன் கையில் என்ன உள்ளது?" என்று கேட்டார்.

"குழைகள் குருவே" என்றார்.

"அப்படியானால்.. மரத்தில்...?" என்று திருப்பி கேட்டார் புத்தர்.

"மரத்தில் நிறைய குழைகள் இருக்கின்றன" என்றார் ஆனந்தன்.

உடனே புத்தர், "ஆனந்தா, இந்த உலகத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று சொன்னாயே...? அது இதுதான். நான் உனக்குப் போதித்தது உன் கையிலுள்ள அளவுதான். நான் உனக்குப் போதிக்காதது மரத்திலுள்ள குழைகளின் அளவு. அவ்வளவையும் என்னால் போதிக்க முடியாது. நீ இந்த உலகத்தை உன் அனுபவத்தால்தான் அதிகம் தெரிந்து கொள்ள முடியும்" என்றார்.

# எட்டுத்தொகை அறிவோம்...



- எட்டுத்தொகை நூல்கள் என்பவை நற்றிணை, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, பரிபாடல், ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகியன.
- எட்டுத்தொகை நூல்களில் அகநூல்கள் 5. புறநூல்கள் 2. அகமும் புறமும் கலந்த நூல் 1 (பரிபாடல்)
- 400 பாடல்கள் கொண்ட நற்றிணை நூலைத் தொகுப்பித்த அரசன் பாண்டியன் மாறன்வழுதி.
- குறுந்தொகை ஒரு அகநூல். 400 பாடல்கள் கொண்டது. தொகுத்தவர் பூரிக்கோ.
- ஐங்குறுநூறு 500 பாடல்கள் கொண்டது. திணைக்கு 100 பாடல்கள் வீதம் 5 திணைகளின் கீழ் அமையப் பெற்றது. பாடிய புலவர்கள் ஐவர்.
- சேர அரசர்கள் 10 பேர் பற்றி 10 புலவர்கள் தலா பத்து பாடல்கள் பாடிய தொகையே பதிற்றுப்பத்து.
- பரிபாடல் என்பது தொல்காப்பியர் கூறும் பா வகை களில் ஒன்று. எனவே பா வகையால் பெயர்பெற்ற நூல் பரிபாடல் ஆகும்.
- கலிப்பா என்ற பா வகையால் ஆன நூல் கலித்தொகை. மொத்தம் 150 பாடல்கள் கொண்டது.
- அகநானூறு ஒரு அகநூல் ஆகும். ஆசிரியப்பாவால் ஆன 400 பாடல்கள் கொண்டது.
- புறநானூறு ஒரு புறநூல். அகவற்பாவால் ஆன 400 பாடல்கள் கொண்டது.
- எட்டுத்தொகை நூல்களில் காலத்தால் முந்தியது புறநானூறு.

ஹங்கேரியில் 1771ஆம் ஆண்டு ஒரு சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி புகைபிடிப்பவர்கள் வரி கட்ட வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்தப் பணம் அந்தந்த உளளூர் தீயணைப்பு படைக்கான நிதியில் சேர்க்கப்படும். யாராவது இரகசியமாகப் புகைபிடிப்பது கண்டு பிடிக்கப்பட்டால் அபராதம் விதிக்கப்படும். அந்தப் பணத்தில் பாதியை தகவல் கொடுப்பவர்களுக்கும், மீதியை அரசாங்க நிதியிலும் சேர்க்கப்படும். அபராதம் கட்ட முடியாதவர்களை ஒரு மரத்தடியில் நிற்க வைத்து 25 சவுக்கடிகள் கொடுக்கப்படும்.

## புகைத்தால் சவுக்கடி



# நடிகரான இசையமைப்பாளர்


- R.P. ராஜநாயஹம் -

உயிர் என்று ஒரு படம் 1971இல் வெளிவந்தது. முத்துராமன், சரோஜாதேவி, லட்சுமி, நாகேஷ் நடித்த படம்.

பி.ஆர்.சோமு இயக்கத்தில். அந்தப்படம் மிகவும் சொற்ப நாட்களில் தயாரிக்கப்பட்டது.

படத்தின் தொடக்கத்தில் டைரக்டர் சோமு ..புல்சூட்டில் வந்து ஒரு பூமி உருண்டையை உருட்டியவாறு

இறைவன் படைக்கும்போது
மனிதனுக்கு கையை
கொடுக்க மறக்கலாம்.
தலைக்கொடுக்க மறக்கலாம்.
கண்ணைக்கொடுக்ககூட
மறக்கலாம். ஆனால்
எதைக்கொடுக்க மறந்தாலும்
ஆண்டவன் ஒன்றை மட்டும்
கொடுக்க மறப்பதே இல்லை.



அது உயிர்! உயிர்! உயிர்!" (டைட்டில் ஆரம்பம்!)

பி.ஆர் சோமு அதற்கு முன் தெய்வசங்கல்பம் (1969) ஏ.வி.எம். ராஜன், விஜயகுமாரி, முத்துராமன் நடிப்பில் இயக்கியவர்.

உயிர் படத்திற்குப் பிறகு எங்கள் குலதெய்வம், அழைத்தால் வருவேன், ராஜா யுவராஜா, சர்வம் சக்தி மயம், தாயே நீயே துணை போன்ற படங்கள் இயக்கியவர்.

உயிர் படத்திற்கு ஆறு பாடல்கள். இரண்டு பேர் இசையமைப்பாளர்கள் என்று தீர்மானித்து அந்த இரண்டு இசையமைப்பாளர்களுக்கும் மூன்று மூன்று பாடல்கள் என்று முடிவாகியிருக்கிறது. அந்த இசையமைப்பாளர்கள் ராஜையாவும் ரமணாஸ்ரீதரும்.

ராஜையா அந்தப் பட வாய்ப்பை அவரே துறந்தாரா அல்லது ஏதேனும் அரசியலோ தெரியவில்லை. அப்போது அப்படி தட்டிப்போன வாய்ப்பு அன்னக்கிளியில் 1975இல் கிடைத்து இளையராஜா ஆனார்!

ரமணாஸ்ரீதர் தனி இசையமைப்பாளராக "உயிர்"படத்தில் அறிமுகமானார்.

"தண்ணீரில் ஏதடி நெருப்பு, இதை தாங்காமல் ஏனிந்த தவிப்பு", "தனிமையிலும் நாணமா மைவிழியில் ஜாடையா பூமுகத்தை ஏன் மறைத்தாய் நான் வரையும் பொன்னோவியமே"

இந்த சௌந்தர்ராஜன் பாடல்கள் இந்தப்படத்தில் தான்!

இன்னொரு சுவையான தகவல். கமல்ஹாசன் இந்தப்படத்தில் டான்ஸ் அசிஸ்டண்ட்.

கமல் போட்ட ஸ்டெப்ஸ் பார்த்து முத்துராமன் மிரண்டு போய் "என்னப்பா கமல்! நான் என் வயசுக்கு நீ போடுற ஸ்டெப்பெல்லாம் போட முடியுமா?" என்றாராம்.

இந்த ரமணாஸ்ரீதர் வேறு வாய்ப்புகள் இல்லாமல் மெல்லிசைக் கச்சேரிகள் செய்து வந்தார். இவரிடம் சுவாரசியம் என்னவென்றால் சிவாஜி பாடல்களை சிவாஜியை இமிடேட் செய்து பாடுவார். எம்.ஜி.ஆர் பாடல்களை எம்ஜிஆர் ஆக்சனில் பாடுவார். திருவையாற்றுக்காரரான ரமணி தீவிரமான சிவாஜி கணேசன் ரசிகர்!

பின்னால் ரமணா தன் பெயரை விஜய் ரமணி என்று மாற்றிக்கொண்டார். "யாகசாலை" என்று ஒரு படத்தில் இசையமைத்து ரமணியே பாடிய பாடல் - "ஒரு ரோசாப்பு சிரிக்கிறது! புது ராசாவை நினைக்கிறது!" அந்தக்கால "சித்தாடை கட்டிக்கிட்டு சிங்காரம் பண்ணிகிட்டு, மத்தாப்பு சுந்தரி ஒருத்தி ஒயிலாட வந்தாளாம்" பாட்டோடு ஒப்பிடப்பட்டது.

விஜய் ரமணியாக விஷேசமாக இவர் சாதிக்காத நேரத்தில் ஒரு சுவாரசியமான சம்பவம் நடந்தது.

1980இல் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் எம்.ஜி.ஆர் இரண்டே தொகுதிகளை மட்டும் கைப்பற்றும்படியாகி விட்டது. வெற்றியை மட்டுமே அதுவரை பார்த்து வந்த எம்.ஜி.ஆருக்கு தமிழகத்தில் சிவகாசி, கோபிசெட்டிப்பாளையம் ஆகிய இரண்டே தொகுதிகளே கிடைத்தது. பெரும் சரிவு!

உடனே தமிழகத்தில் எம்.ஜி.ஆர் ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது. அந்த நேரத்தில் ஒரு முக்கிய திருமணம் நடந்தது. அந்தத் திருமணத்திற்கு எம்.ஜி.ஆர் வருகிறார். மெல்லிசைக்கச்சேரி நடந்து கொண்டிருந்திருக்கிறது. எம்.ஜி.ஆர் கச்சேரியைப் பார்க்க உட்கார்கிறார்.



மேடையில் ரமணி பாடகர்.

எம்.ஜி.ஆர் பாணியில் ஆக்சனுடன் பாடியிருக்கிறார். "என்ன தான் நடக்கும் நடக்கட்டுமே! இருட்டினில் நீதி மறையட்டுமே! தன்னாலே வெளிவரும் தயங்காதே! ஒரு தலைவன் இருக்கிறான் மயங்காதே!" ரமணி கைகளை ஆட்டி பாடியதைப் பார்த்து எம்.ஜி.ஆர் புன்சிரிப்போடு ரசித்திருக்கிறார்.

"அங்கே சிரிப்பவர்கள் சிரிக்கட்டும்
அது ஆணவ சிரிப்பு
இங்கே நீ சிரிக்கும் புன்சிரிப்போ
ஆனந்தச் சிரிப்பு
நல்ல தீர்ப்பை உலகம் சொல்லும்
நாள் வரும்போது
அங்கே சிரிப்பது யார் அழுவது
யார் தெரியும் அப்போது!
நான் ஒரு கை பார்க்கிறேன். நேரம்
வரும் கேட்கிறேன்.
பூனையல்ல புலி தான் என
போகப்போக காட்டுகிறேன்
போகப்போக காட்டுகிறேன்!"

சரம் சரமாக எம்.ஜி.ஆர் பாடல்களை அவர் முன்னேயே ரமணி பாடியிருக்கிறார்.


எம்.ஜி.ஆர் மேடையேறி "என்னுடைய ஆட்சி கலைக்கப்பட்ட நிலையில் நான் மன அமைதியை இழந்திருந்தேன். இன்று ரமணி என் படப்பாடல்களைப் பாடி என்னை சந்தோசப்படுத்தி விட்டார்! எனக்கு ரொம்ப ஆறுதலாயிருந்தது. அவருக்கு என் வாட்சை அன்பளிப்பாக தருகிறேன்." என்று கையில் கட்டியிருந்த ரோலக்ஸ் வாட்சைக் கழட்டி விஜய் ரமணிக்கு கொடுத்து விட்டார்!

இப்படி எம்.ஜி.ஆர் எத்தனையோ பேருக்கு வாட்சைக் கழட்டிக் கொடுத்திருக்கிறார்.


"ஓரம்போ! ஓரம்போ! ருக்மணி வண்டி வருது" ராஜையாவுடன் ரமணி அந்தக்காலத்தில் கச்சேரியில் பாடிய "கண்ணம்மா! கண்ணம்மா!" தான்! ரமணி பின்னர் எம்.எஸ்.வி, இளையராஜா ஆகியோரிடம் இசையமைப்பில் உதவியாளராக பணிபுரிந்தார். சில பாடல்களும் பாடியிருக்கிறார்.


அவருக்கு நடிகராக புனர்ஜென்மம் வாய்த்தது. ராகவேந்தர் ஆனார்!

சிந்துபைரவியில் இவர் நடிகர்களின் பாணியில் பாடும் குணவிசேசத்தை கே.பாலச்சந்தர் பயன்படுத்திக்கொண்டார். வைதேகி காத்திருந்தாள் படம் இவரை நடிகராக நிலைநிறுத்தியது. கமல்ஹாசனின் "விக்ரம்" படத்திலும் வந்தார்!



நடிகர் ராகவேந்தராகத்தான் இவரை இன்று தெரியும். பாடகி கல்பனாவின் தந்தை!



# யா/ விக்கினேஸ்வரா கல்லூரி கரவெட்டி



## எமது பாடசாலை...

தென்மராட்சி மணியகாரராக செயலாற்றிய கரவெட்டி பெருங்குடி மகனான இராசவாசல் முதலியார் உயர்திரு வீரவாகு சிற்றம்பலம் அவர்களினால் 1917ம் ஆண்டு இக்கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது.

அன்றைய சூழ்நிலையில் ஆங்கிலஅறிவு மிகவும் அவசியமாகத் தேவைப்பட்டது. கரவெட்டியிலும் அதனை அடுத்துள்ள கிராமங்களிலும் ஆங்கிலம் போதிக்கும் பாடசாலைகள் எதுவும் இல்லாமையினால் அம்முக்கிய தேவையை நிறைவேற்றுவதற்கு சின்னத்தம்பி முதலியார் பெருமனதுடன் முன்வந்தார்.

மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் இருந்து சில மாணவர்களையும் மூன்று ஆசிரியர்களையும் கொண்டு கரவெட்டி மேற்கு, நெல்லியடி வெல்லன்கிராய் வீதியில்




நுகவில் வயலுக்குக் கிழக்குப் பக்கத்தில் கிடுகுக் கொட்டகையுடன் பாடசாலை ஆரம்பமானது. திரு.கதிரித்தம்பி கிருஸ்ணபிள்ளை அதிபராகவும், திரு.வல்லிபுரம் மயில்வாகனம் முகாமையாளராகவும் நியமனம் பெற்றனர். இவ்வாறாக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை 1917.10.06 இல் மூன்று வகுப்பறைகளைக்கொண்ட நிரந்தரக்கட்டடத்தைக் கொண்டதாக மாற்றம் பெற்றது.

1919 இற்குப் பின்னர் ஈ.எஸ்.எல்.சி. (E.S.L.C) வகுப்புக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்த இந்தியாவிலிருந்து பட்டதாரி ஆசிரியர்கள் தருவிக்கப்பட்டிருந்தனர். விஞ்ஞானம் போதிப்பதற்குரிய வசதிகளை திரு.க.சின்னத்தம்பி (இராசவாசல் முதலியார்) ஏற்படுத்திக் கொடுத்தார். இதன் பயனாக எஸ்.எஸ்.எல்.சி. (S.S.L.C) பரீட் சைக்கு மாணவர் தோற்ற வழிவகுக்கப்பட்டது.

1954 இல் அதிபர் திரு.கே.சிவப்பிரகாசத்தின் முயற்சியினாலும் முகாமையாளர் திரு.கே.சி.நடராசாவின் செல்வாக்கினாலும் பாடசாலையில் S.C கலை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இவர்களின் பெரு முயற்சியினால் 1958 இல் S.C விஞ்ஞான வகுப்புக்களும் கொண்ட பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது. மாணவர்கள் பல்கலைக்கழக புகுமுக வகுப்புகளில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகினர்.

தொடர்ந்து அதிபர்கள் வரிசையில் திரு.வி.செல்வராஜா, திரு.க.அம்பலவாணர், திரு.வே.சிவசிதம்பரம் போன்ற அதிபர்கள் தமது நிர்வாகத்திறனாலும் அயரா உழைப்பினாலும் கல்லூரியின் தரத்தையும் புகழையும் மேலும் ஓங்கச் செய்து இன்றும் எமது கல்லூரி வடமராட்சிப் பகுதியில் ஒரு சிறந்த 1AB பாடசாலையாக விளங்க வழிவகுத்துள்ளார்கள்.

மேலும் இன்றைய அதிபர் திரு.வே.சிவசிதம்பரத்தின் காலத்தில் இசுறு பாடசாலையாக அத்திட்டத்தின்கீழ் உள்வாங்கபட்டது ஒரு முக்கிய மாற்றமாகும். இதன் பயனாக பாடசாலைக் கட்டமைப்பிலும் பௌதீக வள விருத்தியிலும் துரித மாற்றங்கள் இடம்பெற்று வரு கின்றமை குறிப்பிடத்தக்கது.



பாடசாலைக் கட்டமைப்பைப் பொறுத்த வரை ஆரம்பப் பிரிவு வேறாக்கப்பட்டு தனியான நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு யா/விக்னேஸ்வரா ஆரம்ப பாடசாலை என்ற பெயரில் இயங்க வழிவகுக்கப்பட்டுள்ளது.

1977 இல் அதிபர் திரு.எஸ்.நமசிவாயம், பாடசாலை அபிவிருத்திச்சபை, பழைய மாணவரும் வெளிநாட்டு உதவித்திணைக்கள கணக்காளருமான திரு.எஸ்.வேலாயுதம் அவர்களின் பெருமுயற்சியினால் க.பொ.த.உயர்தர கலை, வர்த்தக, விஞ்ஞான் வகுப்புகள் மீளவும் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டன.

1980 இல் திரு.க.சிவபாதசுந்தரம் அவர்கள் அதிபராகக் கடமையேற்ற பின் கல்லூரி சகல துறைகளிலும் துரித முன்னேற்றம் கண்டது. பல்கலைக்கழகத்திற்கு விஞ்ஞானபீடம், கலைப்பீடம், வர்த்தகபீடம் ஆகியவற்றிற்கு மாணவர்கள் ஒவ்வொரு வருடமும் தெரிவாகினர். இவர் சகல விளையாட்டுத் துறைகளின் நுட்பங்களையும் நன்கு கற்றுத்தேர்ந்தவராகவும், ஆர்வமுடையவராகவும், இருந்தபடியால் கல்லூரியில் மாணவர்களிடையே விளையாட்டுத்துறையில் மிகுந்த ஆர்வத்தையும் புகுத்தினார்.

இவர் தனது அதிபருக்குரிய பொறுப்புக்களோடு கல்லூரியில் முழுநேர ஆசிரியராக விலங்கியலையும், ஆங்கிலத்தையும் திறமையாகக் கற்பித்தவர். இவர் காலத்தில் மாணவர் ஆசிரியர் எண்ணிக்கை இருமடங்காக அதிகரித்ததோடு, கட்டிட வளர்ச்சித்துறையிலும் மற்றும் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் நிறைவு கண்டு கல்லூரி துரித வளர்ச்சியை எய்தியது.

வாரம் ஒரு பாடசாலை

## அதிபர் பற்றி...



பாடசாலையின் சமூகம் பெற்றுக கொண்ட கொடை தான் அதிபர் சிவசிதம்பரம் அவர்கள். தன்ன லம் பாராது கரவையூரில் சிறந்த பாடசாலையாக முன்னிலைப்படுத்தினார். மாணவர்களின் அனைத்து செயற்பாடு களிலும் முன்னின்று உழைத்தார். இவருடைய காலத்தில் இசுறு பாடசாலைத் திட்டத்திற்குள் இப்பாடசாலையைக் கொண்டு வருவதற்கு அரும்பாடுபட்டார்.

இவருடைய காலத்தில் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகக்காணப்பட்டது. மாணவர்களின்கல்வி முயற்சியில் அரும்பாடுபட்டார்.

கலை, கலாசார, சமூக பழக்கவழக்கங்கள், விளையாட்டுத்துறை போன்றவற்றில் அதிக அக்கறை காட்டினார். மாணவர்கள் கோட்டம், வலயம், மாகாணம், தேசிய மட்டம் என்ற போக்கில் சென்று பரிசில்களைத் தட்டிச் சென்றனர். இவருடைய காலத்தில் பாடசாலை கண்ட முன்னேற்றம் சொல்லி அடங்காது. வளர்க இவர் சேவை வாழ்க இவர் நாமம். பாடசாலைக்கு மட்டும் அல்லாது, சமூகத்திற்காகவும் அயராது உழைத்து வருகிறார்



# முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு சமைத்த உணவு விநியோகம்

(கிரு-சிகரம்)

யாழ் மாவட்டத்தில் தொடர்ந்து மூன்று தினங்களாகப் பெய்து வரும் மழை காரணமாக இடம்பெயர்ந்து 12 முகாம்களில் தங்கியுள்ள 666 குடும்பங்களைச்சேர்ந்த 2554 பேருக்கும் சமைத்த உணவுகள் வழங்கப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மதியம் வரை கிடைத்த புள்ளி விபரங்களின்படி இந்த தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், அவர் குறிப்பிட்டார்.

இடம் பெயர்ந்து 12 முகாம்களில் உள்ள மக்களுக்கு தேவையான சமைத்த உணவு மற்றும் உலர் உணவுகளை அந்தந்த பிரதேச செயலகத்தின் ஊடாக வழங்கப்படுவதாகவும், இடம் பெயர்ந்துள்ள அதிகமானவர்களுக்கு தற்போது உடனடித் தேவையாக உள்ள நிலவிரிப்பு மற்றும் தறப்பாள்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மாவட்டச்செயலகம் மேற்கொண்டு வருவதாகவும் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட தாழமுக்கத்தால் நாட்டின் பல பாகங்களிலும் கடந்த மூன்று தினங்களாக பெய்து வந்த மழையினை அடுத்து யாழ் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பல சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்து யாழ் மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலர்களிடமிருந்தும் விபரங்களைத் திரட்டி வருவதாகவும் யாழ் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

# 25 வருடங்களின் பின் நடைபெற்ற முழுமதி சனசமூகநிலைய வாணிவிழா

(பகீ-சிகரம்)

கோப்பாய் தெற்கு, கட்டப்பிராய் முழுமதி சனசமூக நிலையத்தில் 25 வருடங்களுக்குப் பின்னர் கடந்ததிங்கட்கிழமை வெகு சிறப்பாக வாணி



விழா நடைபெற்றது.


சனசமூக நிலைய முன்றலில் மாலை 3.30 மணிக்கு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் வலிகாமம் கிழக்கு பிரதேசசபை தவிசாளர் அன்னலிங்கம் உதயகுமார் பிரதம விருந்தினராகவும், கல்வியங்காடு ஜே/296 பிரிவின் கிராமசேவகர் சி.யஸ்ரீன் சுரேந்திரா மற்றும் கோப்பாய் பிரதேசசபை உறுப்பினர் சுந்தரம் செல்வரத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், ஸ்வதி முன்பள்ளியின் ஆசிரியர் திருமதி. சாந்தினி மற்றும் கிராமிய உழைப்பாளர் அபிவிருத்தி மையத்தின் வட மாகாண அமைப்பாளர் ச.பாலசிங்கம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

த.திவ்யாவின் வரவேற்புரை, சரஸ்வதி முன்பள்ளி மாணவர்களின் வரவேற்பு நடனத்தை தொடர்ந்து, பா.வரேந்திரகுமார் தலைமையுரை வழங்கினார். விருந்தினர்களின் உரையைத் தொடர்ந்து பேச்சு, கவிதை போன்றவற்றுடன் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

குறிப்பாக இந்த நிகழ்வின் இறுதியில் கடடப்பிராய் கிராம இளைஞர்களால் வழங்கப்பட்ட "அது ஒரு சக்கரம்" என்ற நாடகம் நிகழ்வில் கலந்துகொண்டவர்களின் அமோக கைதட்டல்களையும் வரவேற்பையும் பெற்றது.

கிராமிய உழைப்பாளர் அபிவிருத்தி மையத்தின் வட மாகாண அமைப்பாளர் ச.பாலசிங்கத்தின் எழுத்துருவிலான இந்த நாடகத்தை சிகரம் ஊடக இல்ல சந்தைப்படுத்தல் உதவி முகாமையாளர் நா.சாந்தரூபன் நெறியாள்கை செய்திருந்தார். இந்த நாடகத்தை மேலும் மெருகூட்டும் வகையில் அருணா இசைக்குழுவைச் சேர்ந்த ஒகன் இசைக் கலைஞன் அ.கேதீஸால் பின்னணி இசை வழங்கப்பட்டது. சில தினங்களாக தொடர்ந்து பெய்துவரும் அடை மழையயும் பொருட்படுத்தாது இந்த விழாவை சிறப்புற நடாத்தி முடிப்பதற்கு முழுமதி சனசமூக இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பாராட்டுக்குரியது என சனசமூக நிலையத்தின் தலைவர் பா.வரேந்திரகுமார் தெரிவித்தார்.

# தொண்டைமானாறு வெளிக்கள நிலைய கட்டட வேலைகள் ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு விஞ்ஞான வெளிக்கள நிலையத்தின் முதல் கட்ட ஆரம்ப பணிகள் கொழும்பிலிருந்து வருகை தந்த டில்மா நிறுவனத்தினரின் பங்களிப்பின் காரணமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வல்வெட்டித்துறை நகரசபை தலைவர் நடராஜா அனந்தராஜ் தெரிவித்துள்ளார்.

தொண்டைமானாறு விஞ்ஞான வெளிக்கள நிலையத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த பெப்ரவரி மாதம் நடந்ததைத் தொடர்ந்து, கட்டடப் பணிகளை ஆரம்பிப்பதற்கான நிதி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டதால் கட்டடட வேலைகள் ஆரம்பிக்கப் படவில்லை எனினும் தற்போது மேற்படி நிறுவனத்தால் முதல் கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது இதற்கான மேற்பார்வைப் பணிகளை பொறியியலாளர் சஞ்சீவன் மேற்கொண்டு வருகின்றார். இதனைத் தொடர்ந்து வெளிக்கள நிலையத்தினால் சுற்று மதில் அமைப்பதற்காக 24 இலட்சம்ரூபா ஒதுக்கப்பட்டு சுற்று மதில் அமைப்பதற்கான வேலைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளது தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் கல்வி மற்றும் ஆய்வு முயற்சிகளினால், பல வருடங்களாக யாழ் மாவட்ட மாணவர்கள் மட்டுமல்லாது வெளி மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களும் ஆசிரியர்களும் பங்கு பற்றிப் பயன் அடைந்து வந்தனர். அதனூடாக விஞ்ஞானக் கல்வியானது மிக உயர்ந்த நிலையில் இருந்ததுடன் விஞ்ஞானப் பிரிவைப் பல மாணவர்கள் விரும்பித் தெரிவு செய்ததாகவும் பல அதிபர்களும் கல்வியாளர்களும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்த முயற்சியை முன்னெடுப்பதில் தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் செயற்குழுவினருடன், வலயக் கல்விப் பணிப் பாளர்கள் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர சத்திய சீலன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா, மற்றும் ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன் ஆகியோர் தீவிரமாகச் செயற்பட்டு வருவதால் 2013 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இருந்து அதன் பழைய இடத்தில் இயங்கத் தொடங்கும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# பதிவிறக்கப் பெட்டகம்

படைப்பாளி என்பவன் இருளின் வாய் போன்றவன். அவன் மூலம் வாத்தைகள் வந்து விழுகின்றன. பல நேரங்களில் அவர்களின் கட்டுப்பாட்டை மீறி இவ் வார்த்தைகள் வந்து விழும். அவனுக்குள் இருக்கும் புதைகுழி ஆழமானதாக இருக்கும். அப்புதைகுழியில் உள்ளவற்றை மற்றவர்களுடன், மனிதகுலத்துடன் அவர்கள் பகிர்ந்து கொள்ள விரும்புகிறார்கள்.
**– விக்டர்ஷியூகோ**

கலைஞன் குகையில் வாழ்பவன். ஆனால் மக்கள் தன்னை குகைக்குள் வந்து சந்திக்க வேண்டும் என்று விரும்புபவன்.
**– அழசன**

என்னையோ என் எழுத்தையோ பிழக்காதவர்கள் என்னைச் சந்திக்க வேண்டாம். அவர்களோடு நான் எதுவும் விவாதிக்கத் தயாராக இல்லை. அவர்கள் என்னை சந்திப்பது வீண். ஏனென்றால், அவர்கள் நான் ஒரு மோசமான எழுத்தாளன் என்று என்னையே நம்ப வைக்க முயற்சி செய்கிறார்கள். இதை விட வீண் வேலை ஏதாவது இருக்க முழயுமா? என் எழுத்து எனக்கே பிழக்காமல் போகும் போது நானே எழுதுவதை நிறுத்தி விடுவேன். மற்றவர்கள் யாரும் கவலைப்பட வேண்டாம். எனக்குக் கூட சில எழுத்தாளர்களைப் பிழக்கவிலலைதான். அதற்காக அவர்களை நேரில் சந்தித்து அவர்களின் சட்டைக் காலரைப் பிழத்து "நீ எனக்குப் பிழத்தபழ எழுது" என்று நான் மிரட்டுவதில்லை. சரியாகச் சொன்னால் எனக்குப் பிழக்காத எழுத்தாளர்களை நான் பழப்பதே இல்லை. அதுதான் நமக்கு நாமே செய்து கொள்ளும் மரியாதை. எனக்குப் பிழக்காததைப் பழக்கிறேன் என்றால் என்னை நானே வருத்திக் கொள்கிறேன் என்று அர்த்தம். அந்தத் தவறை ஒருபோதும் செய்யாதீர்கள். உங்கள் மனதுக்கு உகந்த விஷயங்களை மட்டுமே பழயுங்கள்.
**– சாரு நிவேதிதா**

புதிய கலைஞன் என்பவன் கலகக்காரனாய் மட்டுமே இருக்க முழயும். சமூகத்தின் மட்டுதட்டிப்போன வெகுஜன இரசனையுடன் முரண்டு பண்ணக் கூழயவனாய் மட்டுமே இருக்க முழயும்.
**–ஜி.நாகராஜன்**

இளம் வயதில் ஏற்பட்ட நெருக்கழகளை மட்டுமல்ல, வாழ்க்கையில் ஏற்பட்ட சகல நெருக்கழகளையுமே நான் வாசிப்பின் மூலமும் எழுதுவதின் மூலமும்தான் தீர்த்துக் கொண்டு வருகிறேன். எழுதுவதைவிட வாசிப்பதே எனக்கு முக்கியமானது. புத்தகங்களும் இயற்கையும்தான் வாழ்க்கையைப் பற்றி நம்பிக்கை கொள்ளக் காரணங்களாக இன்றுவரையிலும் இருக்கின்றன.
**– சுந்தர ராமசாமி**

விமர்சனங்களால் பாதிக்கப்படுகிறதோ என்னவோ, எனக்கு மெல்லிய மனம்தான். என் மென்மை, என் கூச்சம், என் ஒதுங்கல் எல்லாம் கடைசிவரை இப்பழயே இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். இதற்கிடையில் தான் என் மனிதர்களை நானும், என்னிடம் என் மனிதர்களும் அடைவது சாத்தியமாகி இருக்கிறது. உங்களைப் போல யாராவது எதிரே வந்துகொண்டுதான் இருக்கிறார்கள். நானும் போய்க்கொண்டுதான் இருக்கிறேன்.
**– வண்ணதாசன்**

உலகில் எட்டு அதிசயம் ஏழு அதிசயம் என்றெல்லாம் ஏதேதோ சொல்லுகிறார்கள். இதில் நான் கண்ட பேரதிசயம் என்னவென்றால், விஷயம் தெரியாதவர்கள் மிகத் துணிவுடன் விஷயந் தெரிந்தவர்கள் போலப் பேச முன்வந்து விடுவது தான். இந்த அதிசயத்தைப் பார்த்த பிறகு மற்ற அதிசயங்களை நேரில் சென்று பார்க்க வேண்டுமென்ற ஆசையே எனக்கு இல்லாது போய் விட்டது.
**– சா.கந்தசாமி**

நாவலாகட்டும் சிறுகதையாகட்டும் கவிதையாகட்டும் லீவ் லெட்டராகட்டும் எதைத் தொட்டாலும் 'நீர் மன்னன்யா!' என்று சொன்னால் ஒழிய இந்தத் தலைமுறை எழுத்தாளர்களில் பலருக்கு திருப்தியே ஏற்படுவதில்லை. இப்பழ புகழுரைகளை அவர்கள் பாட்ழ சொல்லலாம், நாம் சொல்ல முழயுமோ?
**– வெங்கட் சாமிநாதன்**

என் கதையைப் பழத்துவிட்டுப் பாராட்டுகிற ஒவ்வொரு முறையும் நான் வாழ்வதற்கான அர்த்தம் எனக்குக் கிடைக்கிறது. முதலிலிருந்து மீண்டும் வாழ நான் நிர்ப்பந்திக்கப்பட்டால் எழுத்தாளனாக, இன்னும் சிறந்த எழுத்தாளனாகவே வாழ்வேன்.
**– பிரபஞ்சன்**

# முல்லையில் மழை தொடர்ந்தால் நிலைமை மேலும் சிக்கலாகும்

## மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் அடை மழை காரணமாக தாழ் நிலப் பகுதிகளில் வெள்ளம் உட்புகுந்ததால் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறி வருகின்றனர்.

இங்கு மழை தொடருமாயின் மக்கள் பெரும் அனர்த்தத்துக்கு முகம் கொடுக்க நேரிடும் என மாவட்ட அரசாங்க அதிபர் வேதநாயகன் எச்சரித்துள்ளார்.

தாழ் நிலப்பகுதிகளிலிருந்து வெளியேறிய பொது மக்கள் பாடசாலைகளிலும், தேவாலயங்களிலும் தஞ்சமடைந்துள்ளதோடு அவர்களின் இயல்பு வாழ்க்கையும் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த சில தினங்களாக பெய்து வரும் மழை காரணமாக முல்லைத்தீவின் இரணைப்பாலை, முள்ளிவாய்க்கால், புதுமாத்தளன், அம்பலவன் பொக்கணை, ஆனந்தபுரம், திருமுறிகண்டி, இந்துபுரம், கேப்பாபுலவு, கொக்கிளாய், கருநாட்டுக்கேணி போன்ற முல்லைத்தீவு மாவட்டத்தின் முக்கிய இடங்களில் இருந்து பொது மக்கள் வெளியேறிவருகின்றனர்.


குறிப்பாக இப்பகுகளிலுள்ள தாழ்நிலங்கள் யாவும் தொடர்ச்சியான மழை காரணமாக மழை வெள்ளத்தால் நிறைந்துள்ளன. அத்தோடு சில இடங்களில் வீதிகளுக்கு மேலாக மழைநீரானது பாய்ந்து செல்கின்றது. இதே வேளை முல்லைத்தீவு கடலில் தொடர்ச்சியாக பாரிய அலைகள் எழுந்த வண்ணம் உள்ளதோடு தொடர்ந்தும் காற்றுடன் கூடிய மழை பெய்து வருகின்றது. மேலும் கடும் குளிரும் நிலவுகின்றது.

இதன்காரணமாக அண்மையில் மீளக்குடியமர்ந்த பொது மக்கள் மிகவும் அவதிப்படுகின்றனர். குறிப்பாக தற்காலிக வீடுகளில் தங்கவைக்கப்பட்டிருந்த பொதுமக்கள் பலர் தமது வீடுகளை விட்டு இடம்பெயர்ந்து செல்லத் தொடங்கியுள்ளனர். தற்போது நிலவும் காலநிலையானது அடுத்துவரும் சில தினங்களுக்கு நீடித்தால் முல்லைத்தீவு மாவட்டமானது பாரிய அனர்த்தத்துக்கு முகம் கொடுக்க நேரிடும் என அவர் மேலும் தெரிவித்தார்.



கடந்த செவ்வாய்க்கிழமை இரவு வீசிய கடுங்காற்றினால் வல்வெட்டித்துறை சிவன்கோவிலில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வந்த 30 அடி நீளமான அம்மன்தேர், 27 அடி நீளமான பிள்ளையார்தேர், 25 அடி நீளமான முருகன் தேர் ஆகியன கொட்டகையுடன் குடைசாய்ந்துள்ளமையைக் காணலாம். (116)

# அலையில் அடித்துச் செல்லப்பட்ட றோலர் படகு மீட்கப்பட்டது



(மன்னார்)

கடந்த திங்கட்கிழமை முதல் மன்னாரில் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்து வந்த நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை ஏற்பட்ட கடும் காற்றுடன் கூடிய மழை காரணமாக மன்னார் - பேசாலை கடற்கரையில் நங்கூரமிடப்பட்டிருந்த பெறுமதி வாய்ந்த றோலர் படகு ஒன்று அலையில் அடித்துச்செல்லப்பட்டு கடலில் மூழ்கடிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது.

இந்த நிலையில் பேசாலை பகுதியில் உள்ள நூற்றுக்கணக்கான மீனவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை மதியம் ஒன்று சேர்ந்து பாரிய போராட்டத்தின் மத்தியில் குறித்த படகை மீட்டு கரைக்கு கொண்டு வந்துள்ளனர்.

இந்த நிலையில் பேசாலைப் பகுதியில் உள்ள மீனவர்கள் தமது மீன்பிடிப் படகுகளை பாதுகாப்புக்கருதி மன்னார்ப் பகுதிக்கு கொண்டு வந்துள்ளனர்.

# ஊறணி மக்களுக்கு குடிநீர் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட புத்தூர், ஊறணி கிராம மக்களுக்கு 30 வருடங்களுக்குப் பின்னர் குடிநீர் விநியோகம் நேற்றுமுன்தினம் வலி. கிழக்கு பிரதேச சபையால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

புத்தூர், ஊறணி கிராம குடியேற்றத்திட்டம் ஆரம்பமான காலம் தொடக்கம் நேற்றுமுன்தினம் வரை அக்கிராம மக்கள், குடிநீரைப் பெறுவதற்கு 2 கிலோ மீற்றருக்கு அப்பால் சென்றே பெற்றனர்.

இது தொடர்பாக பல்வேறு தரப்பினரிடம் பல தடவைகள் முறைப்பாடு செய்யப்பட்ட போதும், எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது தொடர்பாக பிரதேச வாழ் மக்களினால் வலி. கிழக்கு பிரதேச சபையிடம் குடிநீர் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதனையடுத்து பிரதேச சபையினால் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாள் தோறும் குறித்த கிராமத்திற்கு 3,000 லீற்றர் குடிநீரினை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் அ. உதயகுமார் தெரிவித்தார்.

# இந்துக் கோவில்கள் முல்லையில் புனரமைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்று 7 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டும் - ஜனாதிபதியின் 67 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டும் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இந்துக் கோவில்கள் தமிழ் மக்களின் பூஜை வழிபாட்டுக்காக புனரமைக்கப்படவுள்ளதாக நீர்ப்பாசன அபிவிருத்தி மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இங்கு அமைச்சர் மேலும் கூறுகையில்;

30 வருடகால பயங்கரவாத நடவடிக்கை காரணமாக சீரழிந்து போயிருந்த நாட்டை ஒரே தேசமாக, ஒரே குடையின் கீழ் ஒன்றுபடுத்தி வரலாற்றுச் சாதனை புரிந்தவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ

அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்று 7 வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டும் ஜனாதிபதியின் 67 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டும் நாடு முழுவதிலும் சகல சமய வழிபாடுகளை "கிருவாபத்து வென்தல் அருணட்ட" என்ற அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள சகல மாவட்டங்களிலும் சர்வ சமய வழிபாடுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் தமிழ் மக்களின் சமய வழிபாட்டுக்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இந்துக் கோவில்களைப் புனரமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தெற்கில் மாத்தறையில் இருந்து வடக்கில் வவுனியா வரையில் 705 கிலோ மீற்றர் தூரம் கொண்ட சைக்கிள் சவாரியொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இதில் முன்னணி சைக்கிளோட்ட வீரர்கள் கலந்துகொள்வார்கள் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# மஞ்சுளமீது தாக்குதல் நடத்தியவரை விரைவில் ஆஜர்படுத்த வேண்டும்

## நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

நீதிசேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ன மீது தாக்குதல் நடத்திய நபரை அழுத்தங்களுக்கு அடிபணியாது நீதிமன்றத்தில் விரைவில் ஆஜர்படுத்துமாறு கல்கிசை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் கல்கிசை பிர தான நீதவான் நிரோஷா பெர்னாண்டோ முன்னிலையில் விசாரணைக்கு எடுத் துக்கொள்ளப்பட்டபோதே கல் கிசை பிரதான நீதவான், பொலிஸாருக்கு மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

தாக்குதல் சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளியை கைது செய்யும் வகையில் விசாரணைகளை பொலிஸார் மேற்கொள்ளவில்லை என கல்கிசை சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி அத்துல்ல ரணகல்ல நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதனையடுத்தே, தனது நீதிமன்ற அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவமானது பாரதூரமான சம்பவமாகும் என்று சுட்டிக்காட்டிய பிரதான நீதவான், சந்தேக நபரை விரைவில் ஆஜர்படுத்துமாறு உத்தரவிட்டுள்ளார்.

இவ்வழக்கு விசாரணை எதிர் வரும் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# எதிராக வாக்களித்தாலும் இந்தியா எம்முடன் உள்ளது

## கூறுகிறார் அமைச்சர் பீரிஸ்

(கொழும்பு)

கடந்த மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக இந்திய அளித்த வாக்கு எமக்கு ஆழ்ந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியது என்பதனை மறுக்க முடியாது. இருந்தபோதிலும் இந்தியா இப்போது எமக்குப் பின்னாலேயே உள்ள தென வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

புரொன்ட்லைன் இதழுக்கு வழங்கியுள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்தச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த மார்ச் மாதம் ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில், இலங்கைக்கு எதிராக இந்தியா அளித்த வாக்கு எமக்கு ஆழ்ந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியது என்பதை மறுக்க முடியாது.

ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையின் ஆட்டத்தையே மாற்றக் கூடிய நிலையில் இந்தியா இருந்தது.

ஆனால் இப்போது இந்தியா எமக்குப் பின்னால் உள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் ஏற்றத் தாழ்வுகள் இருந்தன.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு மிகவும் முக்கியமானது என்று இந்தியாவைப் போலவே நாமும் புரிந்து கொண்டுள்ளோம்.

ஜெனிவா தீர்மானத்துக்குப் பின்னர், குறுகிய காலத்தில் ஆறு இந்திய அமைச்சர்கள் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

தீர்வை விரைவுபடுத்துமாறு இந்தியா அழுத்தம் கொடுப்பதாக நாம் உணரவில்லை.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில், பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று விரும்புவதாக அவர்கள் கூறுகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மையத்தில் வைப்பது தான் இப்போதுள்ள பிரச்சினை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

44) காரின் விலை ரூபா 120 ஆகும். கப்பலின் விலை காரின் விலையின் 1 5/6 மடங்காக இருந்தால் கப்பலின் விலை யாது? (..............................................................)

**பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

45) சுகத் என்பவன் 16 ரொபிகளை வாங்கி அவற்றில் 3/4 பகுதியைச் சாப்பிட்டு முடித்தான் எனின், அவனிடம் மீதியாக எத்தனை ரொபிகள் இருக்கும்?
1. 12　　2. 8　　3. 4

46) என்னிடமிருந்து ரம்புட்டான் பழங்களில் அரைவாசியைச் சாப்பிட்டு முடித்த பின்னர் மீதியாக 4 ரம்புட்டான்கள் என்னிடமிருந்தது எனின், ஆரம்பத்தில் என்னிடமிருந்த ரம்புட்டான்கள் எத்தனை?
1. 2　　2. 4　　3. 8

47) ஒருவர் தான் பயணம் செய்ய வேண்டிய தூரத்தின் 1/8 பகுதியை நடந்து சென்றார். அவர் நடந்து சென்ற தூரம் 2 km எனின், அவர் பயணம் செய்ய வேண்டிய மொத்தத் தூரம்.
1. 4 km　　2. 8 km　　3. 16 km

**கீழே முதலில் தரப்பட்டுள்ள வாக்கியத்தின் அதே கருத்தைத் தரக்கூடிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து கோடிடுக.**

48) கிழக்கில் சூரியன் உதிக்கும்போது ரோஜாப்பூ சிரிக்கின்றது
1. சூரியன் உதிக்கும்போது ரோஜாப்பூ சிரிக்கின்றது
2. சூரியன் உதிப்பது ரோஜா மலர்வதேற்கே
3. சூரியன் உதிக்கும்போது ரோஜா மலர்கின்றது

49) பொங்கிவரும் நீரோடை மனதைக் கவர்கின்றது.
1. நீர் பொங்கி வருவதால் அது உடலுக்கு இதமானது
2. நீர் பொங்கி ஓடிவரும்போது அது மனதைக் கவர்கின்றது
3. ஓடும் நீர் எப்பொழுதும் மனதைக் கவரும் வகையிலேயே பொங்கி வரும்

50) சிவபாலனுக்கு எவ்வளவு புத்திமதி கூறியும் மது குடிக்கும் பழக்கத்தை அவனால் விட முடியவில்லை.
1. ஆற்றினுள் விறகு வெட்டிப் போட்டதைப் போன்று
2. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாததைப் போன்று
3. ஆறிய கஞ்சி பழங்கஞ்சி என்பதைப் போன்று

51) தாசன் என்பவன் சரியான கஞ்சன். அவனிடம் இருந்து ஏதாவது பொருளைப் பெறுவது மிகக் கடினமாகும்.
1. உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும் என்பதைப் போன்று
2. ஆற்றிலே போட்டாலும் அளந்துபோடு என்பதைப் போன்று
3. ஆமையிடமிருந்து இறக்கை கேட்பதைப் போன்று

52) பரீட்சையில் சித்தியடையாத பாலா அதனை நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தான்.
1. துள்ளுகின்ற மாடு பொதி சுமப்பதைப் போன்று
2. நிலத்தில் சிந்திய பாலை நினைத்து அழுவதைப் போன்று
3. சாண் ஏற முழம் சறுக்குவதைப் போன்று

53) ஆற்றில் எப்பொழுதும் இருப்பது
1. கரை　　2. தண்ணீர்　　3. மீன்

54) தொலைக்காட்சி ஒன்றில் எப்பொழுதும் இருக்கக்கூடியது
1. சத்தம்　　2. திரை　　3. படம்

55) இரவில் எப்பொழுதும் இருப்பது
1. சந்திரன்　　2. நட்சத்திரம்　　3. இருள்



தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013
பகுதி - II
1 மணி 15 நிமி
கல்வி முரசு
வெளியீடு 63
இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.



**பின்வரும் கடிதத்தில் அனுப்புவர் முகவரி, கடிதத்தைப் பெற்றுக்கொள்பவர் முகவரி, கடிதத்தின் முடிவு ஆகியவை ஒழுங்கின்றி எழுதப்பட்டுள்ளன. அவற்றைச் சரியான தொடர் ஒழுங்கில் எழுதிக் காட்டுக.**

யாழ்ப்பாணம்,
2000.04.29
கிருபை இல்லம்
ம.பிரதீப்


கொக்குவில் இந்துக் கல்லூரி
கொக்குவில்
அதிபர்

ஐயா, நான் தரம் 5 பிரிவில் கற்கும் ம.பிரதீப் ஆவேன். நான் சுகவீனமுற்றிருப்பதால் சுகமடையும் வரை பாடசாலைக்கு வரமுடியாதென்பதை அறியத்தருகின்றேன். கடந்த திங்கட்கிழமையிலிருந்து கடுமையான காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளேன். கொக்குவில் கிராம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றேன்.

ம.பிரதீப்
தங்கள் பணிவுள்ள மாணவன்
இங்ஙனம்.

01) கடிதத்தை அனுப்புவர் முகவரி (..............................................)
02) கடிதத்தைப் பெறுபவரின் முகவரி (..............................................)
03) கடிதத்தின் முடிவு (..............................................)
04) ஒழுங்கான நான்முகியின் உச்சி, முகம், விளிம்புகள் எத்தனை?
உச்சி (....................)　முகம் (....................)　விளிம்பு (....................)

05)



இவ்வுருவின் விசேட பெயர் என்ன?
இதன் உச்சி (..............................................)
முகம் (..............................................)
விளிம்பு (..............................................)

06) வெண்டி + காய் சேர்ந்து எழுதுக. (..............................................)

07) ஆங்கிலத்தில் எழுதுக.
1) புத்தகம் (..............................)　2) ஐந்து (..............................)

08) தமிழில் எழுதுக.
1) Elephant (..............................)　2) July (..............................)

09) XXIV + XXVI இதன் விடையை உரோமன் இலக்கத்தில் எழுதுக. (..............................................)

10) கணவனை இழந்தவள் விதவை என்பதுபோல் மனைவியை இழந்தவன்? (..............................)

11) ஒத்தசொல் தருக.

12) எதிர்ச்சொல் தருக.
1) பூட்டு (..................) 2) அதோ (..................)

13) பன்மைச் சொல் தருக.
1) புத்தகம் (..................) 2) அது (..................)

14) இரு திணைகளும் எவை?
1) (..................) 2) (..................)

15) மூவிடப் பெயர்களும் எவை?
1) தன்மை 2) (..................) 3) (..................)

16) பெண்பாற் சொற்கள் எழுதுக.
1) காளை (..................) 2) சேவகன் (..................)

17) பிரித்து எழுதுக.
1) செந்தாமரை (..................) 2) வீட்டுக்கூரை (..................)

18) சீனி, தேங்காயெண்ணெய், பிளாஸ்டிக், பால், மண்ணெண்ணெய், வினாகிரி, சவர்க்காரம், பனிக்கட்டி, மெழுகு இவற்றுள்,
1) நீரில் கரையும் பொருட்கள் (..................)
2) நீரில் கரையாத பொருட்கள் (..................)

19) 6 அப்பியாசக் கொப்பிகளின் விலை ரூபா 30 எனில் 5 அப்பியாசக் கொப்பிகளின் விலை யாது?
(..................)

20) 2.45 கிலோ கிராமைக் கிராமில் தருக. (..................)

21) ரேக்காவின் வயது 10 ஆகும். ரேணுகா ரேக்காவை விட 2 வயது இளையவள். ராதிகா, ரேணுகாவை விட 4 வயது மூத்தவள். ராதிகாவின் வயது என்ன?
(..................)

22) மூன்று சிறுவர்கள் 100 மாம்பழங்களைப் பிடுங்கினர். முதலாவது சிறுவன் அதில் பாதியைப் பிடுங்கினான். மீதியில் இரண்டாவது சிறுவன் பிடுங்கினான். மூன்றாவது சிறுவன் பிடுங்கிய பழங்கள் எத்தனை?
(..................)

23) காற்றின் மூலம் ஓசையை உண்டாக்கும்படியாக அமைக்கப்பட்ட இசைக்கருவி
1) தாளம் 2) வீணை 3) புல்லாங்குழல்

24) திண்மம், திரவம், வாயு ஆகிய மூன்று நிலைகளிலும் இருக்கக்கூடிய பொருள் எது?
1) நீர் 2) மண்ணெண்ணெய் 3) விறகு

**கீழ்க்காணும் சொற்களைக் கொண்டு 34 ஆவது வினாவரையுள்ள வெற்றிடங்களை நிரப்புக.**

| |
|---|
| தெவிநுவர, பருத்தித்துறை, யால, தெஹிவளை, பம்பரகந்தை, அனுராதபுரம், சிகிரியா, பேதுருதாலகால, திருகோணமலை, கண்டி. |

25) மலைக்குகை ஓவியங்களுக்கு சரித்திரப் பிரசித்திபெற்ற இடம்
(..................)

26) மக்கள் பார்வைக்காக மிருகங்கள், பறவைகள் பாதுகாத்து வைக்கப்படும் இடம்
(..................)

27) ருவன்வெலிசாய அமைந்துள்ள இடம்
(..................)

28) மகாவலிகங்கை கடலில் சேருமிடம்
(..................)



29) மிருகங்கள், பறவைகள், சரணாலயம் அமைந்துள்ள இடம்
(..................)

30) இலங்கையில் உயரமான நீர்வீழ்ச்சி
(..................)

31) தலதாமாளிகை அமைந்துள்ள இடம்
(..................)

32) இலங்கையின் அதி உயரமான மலை
(..................)

33) இலங்கையின் வடமுனையில் அமைந்துள்ள இடம்
(..................)

34) இலங்கையின் தென்முனையில் அமைந்துள்ள இடம்
(..................)


35) இலங்கையில் சாதாரணமாக தபால் அனுப்பக் கட்டணம் எத்தனை ரூபாவாகும்
(..................)

36) சந்திரன் முழுமையாகத் தெரியும் நாள்
1) கரிநாள் 2) பௌர்ணமி 3) அமாவாசை

37) வெப்பக்கடத்திகளில் ஒன்று பின்வருவனவற்றுள் எது?
1) துணி 2) செம்பு 3) இரும்பு

38) குமரன் அல்லும் பகலும் அயராது உழைத்தான். அல்லும் பகலும் என்பது
1) இரட்டைமொழி 2) இணைமொழி 3) அடுக்குமொழி

**அஜித் தன்னைச் சுற்றி விளையாட்டுப் பொருட்களை எவ்வாறு காட்சிக்கு வைத்தான் என்பது கீழே உள்ள படம் காட்டுகின்றது. அஜித் கப்பல் இருக்கும் திசையை நோக்கி அமர்ந்திருக்கின்றான்.**




39) அஜித் மேற்குத் திசையில் வைத்த பொருள் எது? (..................)

40) அஜித் மாட்டுவண்டியை எத்திசையில் வைத்தான்? (..................)

41) அவன் லொறியை எத்திசையில் வைத்தான்? (..................)

42) ஆகாயவிமானம் எத்திசையில் உள்ளது? (..................)

43) படகின் விலை ரூபா 150 ஆகும். அவன் படகின் விலையின் 2/3 பங்கை சைக்கிளை வாங்கச் செலவிட்டான். சைக்கிள் விலை யாது? (..................)

# தமிழக கரையை கடந்தது "நிலம்"



வங்கக் கடலில் உருவான "நிலம்" புயல் நேற்று முன்தினம் மாலை சென்னையை அடுத்த மாமல்லபுரம் அருகே கரையைக் கடந்தது. புயல் கரையைக் கடக்கும்போது மழையுடன் 80 கி.மீ. வேகத்தில் அசுர பலத்துடன் சூறைக்காற்று வீசியது. கடலில் இராட்சத அலைகள் பெரும் சீற்றத்தோடு 6 அடி உயர்த்துக்கு எழுந்தன.

பலத்த காற்று காரணமாக சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களில் 1000இற்கும் மேற்பட்ட மரங்கள், மின் கம்பங்கள் முறிந்து விழ்ந்தன. கனமழை மற்றும் புயல் தாக்குதல் காரணமாக வட மாவட்டங்களில் இதுவரை 5 பேர் உயிரிழந்து விட்டனர்.

சென்னை, புதுச்சேரி, கடலூர் கடற்கரைகளில் கடல் மிகுந்த கொந்தளிப்புடன் காணப்பட்டது. சுமார் 6 அடிக்கும் மேலாக எழுந்த அலைகள் அச்சத்தை ஏற்படுத்தின. கடல் சீற்றம் காரணமாக கடற்கரை ஓரங்களில் வசிக்கும் மீனவக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பாதுகாப்பு கருதி வேறு இடத்துக்கு மாற்றப்பட்டனர்.

புயல் எச்சரிக்கையைத் தொடர்ந்து சென்னைத் துறைமுகத்தில் 8ஆம் எண் எச்சரிக்கைக் கூண்டு ஏற்றப்பட்டது. நிலம் புயலால் சென்னையில் நடுக்கடலில் நிறுத்தப்பட்டிருந்த "எம்.டி.பிரதிபா காவேரி" என்ற ஓயில் டாங்கிக் கப்பல் சென்னை பட்டினப்பாக்கம் அருகே புதன்கிழமை கரையைத் தட்டியது. இந்தக் கப்பலில் இருந்து தப்ப முயன்ற ஒருவர் நீரில் மூழ்கி இறந்தார். 6 பேரைக் காணவில்லை

## டெசோ தீர்மானம் ஐ.நா.விடம் நியூயோர்க் சென்றார் ஸ்டாலின்

டெசோ மாநாட்டு தீர்மானத்தை, ஐ.நா. பொதுச் செயலரிடம் வழங்கவும், லண்டனில். நடைபெற உள்ள தமிழ் மாநாட்டில் கலந்து கொள்ளவும், டி.ஆர். பாலுவுடன் தி.மு.க. பொருளாளர் ஸ்டாலின் நியூயோர்க் புறப்பட்டுச் சென்றார். நேற்று முன்தினம் அதிகாலை 3:30 மணிக்கு "எமிரேட்ஸ் ஏர்லைன்ஸ்" விமானம் மூலம் டுபாய் வழியாக லண்டன் சென்று, அங்கிருந்து நியூயோர்க் செல்கின்றார். ஸ்டாலினுடன் அவரது மனைவி துர்காவும் செல்கிறார்.

விமான நிலையத்தில் ஸ்டாலின் கூறியதாவது; ஐ.நா. பொதுச் செயலரை சந்தித்து, டெசோ மாநாட்டு தீர்மானங்களை கொடுக்க உள்ளோம் நாளை ஐ.நா. சார்பில் நடத்தப்படும் மனித உரிமைகள் மாநாட்டில் கலந்து கொள்கிறோம். வரும் 6, 7, 8 ஆகிய மூன்று தினங்கள் லண்டனில் நடைபெறும் இலங்கை தமிழர் நல்வாழ்வு மாநாட்டில் நான், டி.ஆர்.பாலு, டி.கே.எஸ்.இளங்கோவன், கே.எஸ்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் தி.மு.க. சார்பில் கலந்து கொள்கிறோம் எனக் கூறினார்.

## ஜனாதிபதிக்கு பழுதடைந்த உணவு பறிமுதல் செய்தனர் அதிகாரிகள்

கேரள மாநில ஆளுநர் மாளிகையில், ஜனாதிபதி பிரணாப் முகர்ஜிக்கு வழங்கப்படவிருந்த பழுதடைந்த உணவை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி கடந்த 29, 30ஆம் திகதிகளில் திருவனந்தபுரம் வந்தார்.

அங்கு ஆளுநர் மாளிகையில் தங்கிய போது அவருக்கு உணவு தயாரிக்கப்பட்டது.

அப்போது சமையல் அறையில் உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் திடீர் சோதனை நடத்தியதில் பழுதடைந்த பருப்பு, பழுதடைந்த மிளகு, முந்திரி பருப்பு இருப்பதை கண்டுபிடித்து பறிமுதல் செய்தனர்.

இதையடுத்து பிரணாப் முகர்ஜிக்கு வழங்கப்படவிருந்த உணவும் பறிமுதல் செய்யப்பட்டது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு, ஒரு ஹோட்டலில் கோழிக்கறி சாப்பிட்ட கல்லூரி மாணவர் பலியானார்.

இந்த சம்பவத்திற்கு பின்னர், மாநிலம் முழுவதும் அனைத்து ஹோட்டல்களிலும் அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.

மேலும் சில தினங்களுக்கு முன்பு திருவனந்தபுரத்தில் உள்ள பிரபல அமெரிக்க ஹோட்டலில் வாடிக்கையாளர்களுக்கு புழுவுடன் கூடிய சோறு வழங்கியது சோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து ஹோட்டல் உடனடியாக மூடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## சச்சின் எம்.பியாக எதிர்ப்பு தாக்கல்செய்த மனு தள்ளுபடி



(டில்லி)

கிரிக்கெட் வீரர் சச்சின் எம்.பி.யாக தேர்வு செய்யப்பட்டதனை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை, விசாரணைக்கு ஏற்றதல்ல என்று கூறி உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இந்திய கிரிக்கெட் அணியின் மாஸ்டர் பேட்ஸ்மேன் சச்சின் டெண்டுல்கர்(வயது - 39). கிரிக்கெட் போட்டிகளில் இவரது சிறந்த செயந்பாடுகளை பாராட்டும் வகையில், சமீபத்தில் எம்.பி.யாக தேர்வு செய்யப்பட்டார். ஆனால் இதற்கு பலத்தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

மேலும் சச்சினை எம்.பி.யாக தேர்வு செய்யப்பட்டதை எதிர்த்து டில்லி மற்றும் அலகாபாத் உயர்நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்பட்டது. இது குறித்த வழக்குகள் தற்போது விசாரணையில் உள்ளது. இந்த நிலையில் டில்லியை சேர்ந்த எம்.எல்.ஏ. ராம்கோபால் சிங் சிசோடியா என்பவர் உச்சநீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார்.

இந்த மனுவை விசாரித்த தலைமை நீதிபதி அல் தோமஸ் கபீர் தலைமையிலான குழு பிறப்பித்த உத்தரவில், இந்த மனு விசாரணைக்கு ஏற்றதல்ல. எனவே இதை தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறோம் என்று தெரிவித்தது.




## அருண்பாண்டியனின் பிரிவால் கவலைகொள்ளும் விஜயகாந்த்



ஊமைவிழிகள் படத்தில் நடிக்க அருண் பாண்டியன் எத்தனை முறை என்னைப் பார்க்க அலைந்திருப்பார் தெரியுமா... அவருக்கு பல படங்களில் நடிக்க நான்தான் சான்ஸ் வாங்கிக் கொடுத்தேன். ஆனால் அவர் நன்றி மறந்து விட்டுப் போய் விட்டார். அவரது குடும்பத்தினர் நிச்சயம் அவரது செயலுக்காக வருத்தப்படுவார்கள் என்று கூறியுள்ளார் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த்.

தே.மு.தி.க.வைத் தொடங்கிய பின்னர் முதல் முறையாக மிகப் பெரிய அதிர்ச்சியில் உள்ளார் விஜயகாந்த். அவருடன் 50 வருடமாக நெருங்கிப் பழகிய நண்பர் சுந்தரராஜனும், நீண்ட காலம் திரையுலகில் நெருக்கமானவராக இருந்து வந்த அருண்பாண்டியனும் விஜயகாந்த்தை உதறி விட்டு அ.தி.மு.க. பக்கம் போனது அவரை அதிர வைத்துள்ளதாம். இதுவரை இப்படி ஒரு அப்செட்டில் விஜயகாந்த் இருந்ததே இல்லை என்று கூறுகிறார்கள் தே.மு.தி.க.வினர்.

இந்த நிலையில் கட்சித் தலைமை அலுவலகத்தில் நடந்த எம்.எல்.ஏக்கள் கூட்டத்தில் விஜயகாந்த் பேசும்போது மிகவும் உருக்கமாக சுந்தரராஜன் குறித்தும், அருண்பாண்டியன் குறித்தும் பேசினாராம்.

விஜயகாந்த் பேசும்போது, எனக்கு இந்த மைக்கேல் ராயப்பன், தமிழழகன் ஆகியோர் போனது குறித்துக் கூட கவலையே இல்லை. அதைப் பற்றி நான் கவலைப்படவே இல்லை. ஆனால் சுந்தரராஜன் போனது, அருண்பாண்டியன் போனதுதான் என்னை ரொம்பவே கவலைக்குள்ளாக்கி விட்டது. நானும் சுந்தரராஜனும் இன்னிக்கு நேற்றா பழகி வந்தோம். நீண்டகால நண்பர்களாக இருந்தோம். ஆனால் அதை மறந்து விட்டு அவர் போய் விட்டார்.

அருண் பாண்டியனை சினிமாவில் வளர்த்து விட்டு, ஒரு அடையாளம் காட்டியதே நான்தான். ஊமை விழிகள் படத்தில் நடிக்க எத்தனை முறை என்னைப் பார்க்க அலைந்திருப்பார் தெரியுமா... அதையெல்லாம் அவர் நினைத்துப் பார்த்திருக்க வேண்டாமா? அவருக்காக எத்தனை படக் கம்பெனிகளில் நானே பேசி அவருக்கு வாய்ப்பு வாங்கித் தந்தேன் தெரியுமா...

திரையுலகில் அவருக்கு நல்ல வாய்ப்புகள் அமையவில்லை. இருந்தாலும் அவர் நல்ல நண்பராக இருந்ததால் அரசியலில் அவரை இழுத்து விட்டேன். எம்.எல்.ஏ. பதவியிலும் அமர்த்தினேன். ஆனால் அதை அவர் மறந்து விட்டார். இருந்தாலும் அவரது குடும்பத்தினர் நிச்சயம் இதை நினைத்து வருத்தம் அடைவார்கள். அந்த நம்பிக்கை எனக்கு உண்டு என்று உணர்ச்சிகரமாக பேசினாராம் விஜயகாந்த்

## சின்மயியை...

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களின் பிரச்சினை தங்களது எளிய கொள்கையைக் கடந்து எந்த சமூக அரசியல் பிரச்சினைகளிலும் ஈடுபடவோ விவாதிக்கவோ மாட்டார்கள் என்பது. மே 17 இயக்கத்தினர் ஊழல் பற்றியோ, காஷ்மீர் முஸ்லிம்கள் பற்றியோ, கார்ப்பரேட் ஆதிக்கம் பற்றியோ கவலைப்பட மாட்டார்கள். மாவீரர் தினம் பற்றி ஆவேசமாக சர்ச்சை செய்வார்கள். ஆனால் பரமக்குடியில் இறந்தவர்களின் தினம் அவர்களுக்கு முக்கியமாய் இராது. இப்படியே ஒவ்வொரு ஒற்றை செயற்திட்ட வீரர்களும் இன்று இயங்குகிறார்கள்.

இப்படி ஒற்றை செயற்திட்டத்துடன் இருப்பது சாதிய மனநிலையின் ஒரு வெளிப்பாடுதான். சிறுபத்திரிகை நடத்துபவன் அதைப் பற்றி மட்டுமே கவலைப்படுவது, நாம் தமிழர் இயக்கத்தினர் மாவீரர் தினம் பற்றி மட்டுமே பேசுவது என்பதே நெசவாளி நெசவு மட்டுமே செய்ய வேண்டும், பொற்கொல்லன் தங்கத்தை மட்டும் உருக்க வேண்டும் என்கிற பண்பாட்டு மனநிலையில் இருந்துதான் ஏற்படுகிறது. மனுதர்மத்தை எதிர்ப்பவர்கள் முதலில் இந்த ஒற்றை செயற்திட்ட மனநிலையை எதிர்க்க வேண்டும். இன்று இணைய வெளியில் தோன்றும் இது போன்ற ஒற்றைசெயற் திட்ட வீரர்களின் விவாதங்கள் ஆழமற்றவையாய், பயனற்றவையாய் இருப்பதற்கு இதுவே காரணம்.

சின்மயி - ராஜன் லீக்ஸ் சர்ச்சைக்கு விஜய் - அஜித் இரசிகர் சச்சரவு அளவுக்குத்தான் முக்கியத்துவம் உள்ளது. நாம் இந்த சர்ச்சை வழி, நம் சமூகத்தின் போலி அரசியல் போராளிகளை மீண்டும் ஒருமுறை கண்டுகொண்டோம் என்பதே இதன் ஒரே பயன்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..........................................

முகவரி : ..........................................

பிறந்த ஆண்டு : ..........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# பங்களாதேஷில்படகு கவிழ்ந்து 130 பேரைக் காணவில்லை

(டாக்கா)

பங்களாதேஷில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 130 பேர் காணாமற் போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மியான்மர் நாட்டில், பூர்வீக குடிமக்களுக்கும், பங்களாதேஷில் இருந்து சென்று குடியேறியவர்களுக்கும் அடிக்கடி மோதல்கள் நிகழ்ந்து வருகின்றன. சட்ட விரோதமாக குடியேறிய பங்களாதேஷ் வாசிகள் தங்களுக்கு குடியுரிமை வழங்க வேண்டுமெனக் கோரி வருகின்றனர்.

சமீபத்தில் பங்களாதேஷிற்கு எதிராகத் தொடங்கிய கலவரத்தில் ஏராளமானோர் கொல்லப்பட்டனர். நிறைய சொத்துக்கள் சூறையாடப்பட்டன. உயிருக்கு அஞ்சிய மக்கள் மலேசியாவில் தஞ்சம் அடைகின்றனர். பங்களாதேஷிற்கும் தப்பி வருகின்றனர்.

அகதிகள் முகாம்களில் தங்கி இருப்பவர்களும் கள்ளத்தனமாக படகுகள் மூலம் தப்பி, விரும்பிய நாடுகளில் தஞ்சம் அடைகின்றனர். ரோஹிங்கியா முகாமில் தங்கி இருந்த முஸ்லிம்களில் 135 பேர், மலேசியாவுக்கு தப்பிச் செல்ல ஒரு படகில் புறப்பட்டனர்.

பங்களாதேஷ் கடலில் சென்று கொண்டிருந்த போது, அந்தப் படகுப் பாரம் தாங்காமல் கவிழ்ந்தது. அனைவரும் ஆழ்கடலில் மூழ்கினர். அப்பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள், கடலில் மூழ்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

படகோட்டி உட்பட 6 பேரை மட்டுமே உயிரோடு



மீட்க முடிந்தது. மீதமுள்ள 130 பேரை கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்களகதி என்ன என்று தெரியவில்லை. அவர்களைத் தேடும் பணியில்கடற்படை வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். கடலோர காவல் படையினும், உடல்கள் கரையில் ஒதுங்கிக் கிடக்கின்றனவா? என்று தேடுகின்றனர்.

சட்ட விரோதமாக அளவுக்கு அதிகமாக ஆட்களை ஏற்றி வந்ததே படகு விபத்துக்கு காரணம் என்று, பங்களாதேஷ் பொலிஸ் அதிகாரி முகம்மது பர்காத் குற்றம் சாட்டினார்

## உலகச் செய்திகள்

## சிரிய விமானப் படையின் உயர் தளபதி சூட்டில் பலி

சிரிய விமானப்படையின் சிரேஷ்ட ஜெனரல் ஒருவர் கிளர்ச்சியாளர்களின் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரச தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது. தலைநகர் டமஸ்கஸில் ருக்ன் அல் டின் மாவட்டத்தில் கிளர்ச்சியாளர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஜெனரல் அப்துல்லா மஹ்மூத் அல் காலிதி கொல்லப்பட்டுள்ளார்.

இது ஜனாதிபதி பசார் அல்அஸாத் அரசின் முக்கிய பிரமுகர் மீதான புதிய தாக்குதலாகக் கருதப்படுகிறது. கடந்த ஜுலை மாதம் கிளர்ச்சியாளர்களின் குண்டுத் தாக்குதலில் சிரிய பாதுகாப்பு அமைச்சர் மற்றும் அஸாத்தின் மைத்துனர் அஸ் ஸாப் 'வ்கத் ஆகியோர் கொல்லப்பட்டனர். தீவிர வாத குழுவின் தாக்குதலில் விமானப்படை ஜெனரல் கொல்லப்பட்டுள்ளார்.

அவர்கள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் மற்றும் விஞ்ஞானிகளை இலக்குவைத்து செயற்பட்டு வருகிறார்கள் என்று அரச தொலைக்காட்சி செய்தியில் கூறப்பட்டுள்ளது.

கொல்லப்பட்டுள்ள விமானப்படை ஜெனரல், விமானம் ஓட்டும் கலை தொடர்பில் சிரியாவில் புகழ் பெற்ற நிபுணர் என்றும் விமானப் படையின் கட்டளைப் பிரிவின் உறுப்பினர் என்றும் ஏ. எப். பி. குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே சிரிய விமானப் படை கிளர்ச்சியாளர் பகுதிகள் மீது தொடர்ந்து வான் தாக்குதல்களை நடத்தி வருவதாக சிரியா தொடர்பில் கண்காணிப்பில் ஈடுபட்டு வரும் லண்டனை மையமாகக் கொண்ட மனித உரிமை அமைப்பு கூறியுள்ளது.

இதில் டமஸ்கஸின் புறநகர் பகுதியான ரன்கூஸ் மற்றும் ஹாஸ்டா பகுதிகளில் ஆறு தடவைகள் வான் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன. தவிர மத்திய மாகாணமான ஹோம்ஸ் மற்றும் வட மேற்கு மாகாணமான இத்லிப் ஆகிய பகுதிகளிலும் வான் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

## இரட்டைக் குழந்தைகளுக்கு தாயானார் 61 வயது பாட்டி




பிரேசில் நாட்டைச் சேர்ந்த 61 வயது பாட்டி இரட்டை குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளார். பிரேசில் நாட்டின் சாவ் பாவ்லோ என்ற இடத்தைச் சேர்ந்தவர் ஆன்டோனியா ஆஸ்ட்டி(வயது 61). இவரது கணவர் ஜோஸ்(வயது 55).

இந்த தம்பதியருக்கு திருமணமாகி 30 வருடங்கள் ஆகியும் குழந்தை பிறக்கவில்லை.இதனையடுத்து குழந்தையை தத்து எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்த நிலையிலும், முதுமை காரணமாக அதனை மறுத்துள்ளனர். இந்நிலையில் செயற்கை முறையில் குழந்தைப்பேறு அடைய முடிவு எடுத்தனர். ஆஸ்ட்டி முதல்முறையாக 10 ஆண்டுகளுக்கு முன்பாக இதற்காக முயற்சி எடுத்தார். ஆனால் பலன் இல்லை. இரண்டாவது, மூன்றாவது முயற்சிகளும் தோல்வியில் முடிந்தன.இப்போது 4ஆவது முறையாக 10 ஆண்டுகளுக்கு முன் உறைய வைக்கப்பட்ட விந்தணுக்கள் மூலம் செயற்கை கருத்தரித்தல் முறையில்இரட்டைக் குழந்தைகளை பெற்றெடுத்தார் ஆன்டோனியா. மகனுக்கு ராபர்ட்டோ என்றும், மகளுக்கு சோபியா என்றும் பெயரிட்டுள்ளனர்.

## சாண்டி சூறாவளி எதிரொலி 3 அணு உலைகள் மூடப்பட்டன

(நியூயோர்க்

சாண்டி சூறாவளி ஏற்பட்டுளதை அடுத்து அமெரிக்காவில் 3 அணு உலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.மற்றொரு அணு உலையில் மின் உற்பத்தியை எப்போது வேண்டுமானாலும் நிறுத்த தயாராக இருக்க வேண்டுமென்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



புயல் காரணமாக கனமழைபெய்து வருவதால், அணு உலைகளுக்குள் நீர் புகுந்து அணு உலையின் குளிர்விக்கும் பகுதியில் சேதத்தை ஏற்படுத்திவிடக் கூடாது என்பதற்காகவே இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் அச்சமடைய வேண்டாம் என்று அணு மின்துறை உயரதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக ஜப்பானில் கடந்த ஆண்டு ஏற்பட்ட சுனாமியால் புகுஷிமா அணு உலையில் கடல் நீர் புகுந்து கதிர்வீச்சு ஏற்பட்டு பிரச்சினை ஏற்பட்டது என்பது நினைவுகூரத்தக்கது

நியூஜெர்ஸி அருகே உள்ள முக்கிய மின் நிறுவனமான பி.எஸ்.இ.ஜி. அணுமின் நிலையத்தின் ஒரு உற்பத்திப் பிரிவும், நியூயோர்க் அருகே உள்ள இரு அணுமின் நிலையங்களில் தலா ஒரு அணு உலையிலும் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது. அந்நாட்டிலேயே மிகப் பழமையான, 43 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட ஓய்ஸ்டர் கிரீக் அணு மின்நிலையம் உள்ளது. எந்த சூழ்நிலையையும் சமாளிக்க தயாராக இருக்குமாறு அந்த அணு மின்நிலையத்துக்கு முன்னெச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

ஏனெனில் அப்பகுதியில் கடுமையான சுழற் காற்றுடன், கனமழை பெய்து வருகிறது. நாட்டில் உள்ள பிற அணுமின் நிலையங்கள் அனைத்தும் வழக்கம்போல இயங்கி வருகின்றன. ஒரு சில அணுமின் நிலையங்களில் உற்பத்தி அளவு சற்று குறைக்கப்பட்டுள்ளது.

## தோண்டப்படுகிறது அரபாத்தின் உடல்



பலஸ்தீன முன்னாள் தலைவர் யாசிர் அரபாத்தின் உடல் சோதனைக்காக இம்மாத இறுதியில் தோண்டி எடுக்கப்படவுள்ளதாக பலஸ்தீன நிர்வாக வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன. யாசிர் அரபாத்தின் மரணம் குறித்து சந்தேகம் எழுந்துள்ள நிலையில் அது குறித்து விசாரணை நடத்தி வரும் பிரான்ஸ், மேலதிக விசாரணைக்காக தமது விசாரணைக் குழுவை பலஸ்தீனத்திற்கு அனுப்பவுள்ளது. இந்த விசாரணைக் குழு நவம்பர் 24 முதல் 26ஆம் திகதிக்குள் மேற்குக்கரை நகரான ரமல்லாவை சென்றடையவுள்ளது. அதேபோன்று இந்த விவகாரம் குறித்து வேறாக விசாரணை நடத்தும் சுவிட்சர்லாந்து விசாரணைக்குழுவும் அதே தினத்தில் ரமல்லாவை சென்றடையவுள்ளது. இந்நிலை குறித்த காலப் பிரிவில் அரபா த்தின் உடல் தோண்டி எடுக்கப்பட்டு சோதனை நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் இந்தச் சோதனை இரகசியமாகவே இடம்பெறும் என நம்பப்படுகிறது. கடந்த 2004ம் ஆண்டு பிரான்ஸ் இராணுவ மருத்துவமனையில் மரணமடைந்த யாசிர் அரபாத்தின் உடைமைகளில் அண்மையில் பொலோனியம் -210 என்ற கதிரியக்கம் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவரது மரணம் குறித்து சந்தேகம் எழுந்துள்ளது.

## திருமண வீட்டில் தீவிபத்து சவுதியில் 25 பேர் பலி

சவுதி அரேபியாவில் திருமண வீடொன்றில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 25 பேர் உடல் கருகிப் பலியானதுடன், 30 பேர் எரிகாயங்களுக்குள்ளாகியுள்ளனர்.


கிழக்கு சவுதி அரேபியாவில் கிராமமொன்றில் நடைபெற்ற திருமண வைபவத்திலேயே நேற்று முன்தினம் அதிகாலை இந்த தீ விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த தீ விபத்து ஏற்பட்ட வேளையில் திருமண வீட்டிலும் வீட்டு வளவிலும் நூற்றுக்கணக்கானோர் இருந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

திருமண வைபவத்தைக் கொண்டாடுவதற்காக கொண்டாட்ட துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. துப்பாக்கியிலிருந்து வெளியேறிய ரவைகள் வீட்டிற்கு மேலிருந்த உயர் மின்னழுத்த மின்கம்பியில் பட்டு அது கீழே விழுந்துள்ளது. அதிலிருந்தே தீப்பொறி பரவியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

திருமண வீட்டு வளாகத்தை விட்டு வெளியேறுவதற்காக ஒரேயொரு நுழைவாயில் மட்டுமே இருந்துள்ளது. துப்பாக்கிச் சூட்டைத் தொடர்ந்து அறுந்த மின்சாரக்



கம்பி வீட்டு வளாகத்திலிருந்த உலோகக் கதவில் முட்டிக்கொண்டிருந்தமையால் பலர் மின்சாரம் தாக்கி பலியாகியுள்ளனர்.

இந்த தீ விபத்தில் பெண்களே பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக சிவில் பாதுகாப்பு இயக்குநர் குழுமம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த தீ விபத்து தொடர்பான விசாரணையை மேற்கொள்ளுமாறு அந்த நாட்டு கிழக்கு மாகாண ஆளுநர் பணித்துள்ளார்

# மொழி அமுலாக்கம் திருப்தியில்லை

## இன நல்லிணக்கத்திற்கு இதுவே ஆப்பு

(யாழ்ப்பாணம்)

அரச கரும மொழிகளில் பரீட்சயம் இல்லாது விட்டாலும் இந்த இரு மொழிகள் சம்பந்தமாகவும் சமூகங்களுக்கிடையே கலந்துரையாடுவதன் மூலமாக இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள அரசிற்கு அழுத்தம் கொடுக்க முடியும் என்று மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் பாக்கிய சோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகிகள் அறக்கொடை நிலையத்தில் நடைபெற்ற அரச கரும மொழிகள் அமுலாக்கம் சம்பந்தமான பயிற்சிப் பட்டறை நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான பணியகம் மற்றும் சுகவாழ்வுக்கான பயணம் ஆகிய அமைப்புக்கள் இணைந்து நடத்திய இந்தப் பயிற்சிப் பட்டறை நிகழ்வில் அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஒவ்வொரு மனிதனும் தனது பண்பாடு, பாரம்பரியம் என்பவற்றை தனக்கு உரித்தான மொழியில் எடுத்துச் சொல்ல வேண்டும். அப்படியானால்தான் அவன் சுதந்திரமான ஒருவனாக வாழ முடியும். சிங்களம், தமிழ் ஆகிய மொழிகள் அரச கரும மொழிகளாக அரசாங்கத்தினால் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கின்ற போதும் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இந்த நிலை தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையிலும் இவ்விடயம் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இருந்தும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

எனவே இந்த இரு மொழிகளின் அமுலாக்கம் சம்பந்தமாகவும் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டி அரசிற்கு அழுத்தம் கொடுப்பதன் மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும்.

எனவேதான் பரஸ்பரம் மரியாதையுடன் வாழ வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். அரச கரும மொழியாக்கலில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யத் தயாராக வேண்டும் என்றும் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்நிகழ்வில் சிரேஷ்ட சட்டத்தரணி லயன்ஸ் குருகே. எஸ்.ஜி.புஞ்சிகேவா ஆகியோர் உரையாற்றினர்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கிராமிய பொது அமைப்புக்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டனர். (பா)

## குற்றவியல் பிரேரணை சபாநாயகரிடம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்கவிற்கு எதிரான அரசியல் குற்றவியல் பிரேரணை தீர்மானம் சபாநாயகர் சமால் ராஜபக்ஷவிடம் நாடாளுமன்றில் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான லசந்த அழகியவன்ன, சாந்த பண்டார மற்றும் அருந்திக்க பெர்னாண்டோ ஆகியோர் சபாநாயகரிடம் இந்த அரசியல் குற்றவியல் பிரேரணை தீர்மானத்தை சமர்ப்பித்துள்ளனர்.

பிரதம நீதியரசருக்கு எதிராக அரசியல் குற்றவியல் பிரேரணை தீர்மானமொன்றை நிறைவேற்றுவதற்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதான கூட்டணி கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நேற்று முன்தினம் தீர்மானித்துள்ளது.

இந்தத் தீர்மானத்திற்கு கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சித் தலைவர்களும் இணக்கம் தெரிவித்திருந்தனர்.

பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்கவிற்கு எதிரான அரசியல் குற்றவியல் பிரேரணை தீர்மானத்திற்கு சுமார் 107 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்து கையொப்பமிட்டுள்ளன.

அதிகார துஸ்பிரயோகம், நிதி மோசடி உள்ளிட்ட ஆறு குற்றச்சாட்டுக்கள் பிரதம நீதியரசருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ளன. தீர்மானம் நிறைவேற்றும் யோசனைத் திட்டத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அங்கீகரித்துள்ளார்.

## பிரேரணைக்கு ஐ.தே.க. ஆதரவு

(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிரான விசாரணைகளுக்கு ஆதரவளிக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்கவிற்கு எதிராக நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலம் விசாரணை நடத்த ஆதரவளிக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டொக்டர் ஜயலத் ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசருக்கு எதிராக விசாரணை நடத்தும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பது என கட்சியின் செயற்குழு தீர்மானித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மான யோசனையை சபாநாயகரிடம் சமர்ப்பிக்குமாறும், அவ்வாறு சமர்ப்பித்தால் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலம் விசாரணை நடத்த முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் ஆளும் கட்சிகளும், எதிர்க்கட்சிகளும் விவாதிக்க நாடாளுமன்றத் தெரிவுக்குழு களமாக அமையும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இந்திய அமைச்சருடன் ஜி.எல். இன்று முக்கிய சந்திப்பு

புதிய இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஜித்திற்கும், வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கும் இடையில் சந்திப்பொன்று இன்று இடம்பெறவுள்ளது.

இதன்போது இருதரப்பு உறவுகள் குறித்து கலந்துரையாடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. அத்துடன், இலங்கையின் மீள்குடியேற்றம் தொடர்பில் புதிய வெளிவிவகார அமைச்சருக்கு விளக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இனப்பிரச்சினை தீர்வு தொடர்பிலும் இதன்போது ஆராயப்படும் என்று 'டே அன் நைட்' என்ற இந்திய இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இந்து சமுத்திர ஒத்துழைப்பு நாடுகளில் மாநாடு தற்போது இந்தியாவில் இடம்பெற்று வரும் நிலையில், அதில் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பங்குகொண்டுள்ள நிலையிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்த வார இயற்கை அனர்த்தம் இதுவரை அறுவர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள மண்சரிவு மற்றும் வெள்ள அனர்த்தம் காரணமாக இதுவரை 6 பேர் உயிரிழந்துள்ளதோடு 12 பேர் காயமடைந்துள்ளனர்.

மேலும் 18,187 குடும்பங்களைச் சேர்ந்த 68,217 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை வெள்ள அனர்த்தத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தில் 6926 குடும்பங்களைச் சேர்ந்த 23,894 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு 543 குடும்பங்களைச் சேர்ந்த 1841 பேர் 10 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, களனி கங்கை, களு கங்கை, ஜின் கங்கை, நில்வள கங்கை ஆகியவற்றில் நீர் நிரம்பி வழிவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. நான்கு மணித்தியாலங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதால், இந்த ஆறுகளை அண்டிய பகுதிகளில் வாழ்கின்ற மக்களை அவதானத்துடன் இருக்குமாறு அத் திணைக்களம் தெரிவித்துள்ளது. உயிரிழந்த அறுவரில், கம்பஹா, மாத்தறை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் மூன்று மரணங்கள் நிகழ்ந்துள்ளன.

## 'திவிநெகும'...

வருகின்றனர். எனவே அமுல்படுத்தப்படவுள்ள திவிநெகும சட்டமூலத்தை எதிர்ப்பதன் மூலம். சமுர்த்தி பயனைப் பெற்றுவரும் மக்களும் சமுர்த்தி உத்தியோகத்தர்களுமே பாதிப்படைவர்.

திவிநெகும திணைக்களமாகும் போது சமுர்த்தியிலுள்ள 90 வீதமான உத்தியோகத்தர்கள் அந்தத் திணைக்களத்திற்குள்ளேயே உள்வாங்கப்படுவர். இது ஒரு அரசியல் கலப்பில்லாத நடவடிக்கை என்பதுடன் அதிகாரம் ஓரிடத்தில் குவிக்கப்படும் என்பதெல்லாம் வெறும் மாயையான கருத்தாகும். எனவே மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய திட்டத்தை எதிர்ப்பதால் மேலும் மேலும் பாதிக்கப்படுவது மக்களே எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மக்கள் நலத்...

செயற்திட்டம் தொடர்பான விடயம் குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்பட்டபோது கூட்டமைப்பினர் விதண்டாவாதம் புரிய ஆரம்பித்தனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இவ்விடயம் குறித்து விளக்கமளித்துக் கொண்டிருந்தார். திவிநெகும சட்டமூலத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதையும் இத்திட்டம் நிறுத்தப்படுமானால் அப்பாவி வறிய மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்றும் அங்கு விளக்கமளிக்கப்பட்டது.

இதன்போது கூட்டமைப்பு எம்.பி. சிறிதரன் குறுக்கீடு செய்து அனைவருக்கும் ஆத்திரமூட்டும் வகையில் நடந்து கொண்டார்.

இது கட்சியின் அரசியல் கூட்டம் என்றும் கூறி குழப்பத்தை ஏற்படுத்த முயற்சித்தார். அப்போது அதற்கு பதிலளிக்க நாடாளுமன்ற உறுப்பினர், எம்.சந்திரகுமார் முயற்சித்த போது அவரைப் பார்த்து நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் நாகரிகமற்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி பேச ஆரம்பித்தார். இதனைத் தொடர்ந்து கருத்து மோதல் உக்கிரமடைந்தது. கூட்டத்தில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது.

தொடர்ந்தும் கூட்டமைப்பினர் ஆத்திரமூட்டும் வகையில் வார்த்தைகளைப் பிரயோகித்தனர். ஒரு கட்டத்தில் மாநாட்டு மண்டபம் களேபரமாகியது.

இதனைத் தொடர்ந்து கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் நீ, நான், உனக்கு என்று நாகரிகமற்ற முறையில் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரைப் பார்த்து பேசினார். இவருக்கு பக்கபலமாக அதேபாணியில் மற்றுமொரு கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினரான மாவை சேனாதிராசாவும் பேச ஆரம்பித்தார். அப்போது நாடாளுமன்ற உறுப்பினர் அவரைப் பார்த்து நீங்கள் ஒரு மூத்த அரசியல்வாதி, அனுபவசாலி. எனவே உங்கள் கட்சி யைச் சேர்ந்த கனிஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாகரிகமற்ற விதத்தில் நடந்து கொள்ளாமல் அவர்களுக்கு புத்திமதி சொல்ல வேண்டியவர். நீங்களும் அவர்களைப் போல அநாகரிகமாக பேசுகிறீர்கள் என்று கேட்டார். அப்போதும் கூட கூட்டமைப்பு எம்.பிக்கள் அதனை செவிமடுக்காமல் தொடர்ந்தும் குழப்பம் விளைவிக்க முயற்சித்தனர். இதன்போது இரு தரப்புக்கும் இடையில் வாதப் பிரதிவாதங்கள் மேலும் தீவிரம் பெற்றது. ஒரு கட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சந்திரகுமார் பக்கத்திலிருந்த தண்ணீர் போத்தலை கையில் தூக்கினார். அருகில் இருந்தவர்கள் அவரை சாந்தப்படுத்தினர். அங்கு காணப்பட்ட நிலைமை தணிவதற்கு நீண்ட நேரம் எடுத்தது.

தொடர்ந்தும் நிலவிய சலசலப்பை தணிக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்தார். இதனை அடுத்து அங்கு அமைதி திரும்பியது. கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

## காணாமற்போனோரை...

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் பற்றிய தகவல்கள் அவசியமானவை.

எவ்வாறெனினும், ஏனைய சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும். பொதுமக்கள் மீது அரசாங்கத் தரப்பு தாக்குதல் நடத்துவதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை.

தொழிலாளர்களின் உரிமைகள், கைதிகளின் உரிமைகள், இடம்பெயர் மக்களின் உரிமைகள், மகளிர் உரிமைகள், சிறுவர் உரிமைகள், சட்டவிரோத குடியேற்றங்களை தடுத்தல், மனித உரிமை பொலிஸாருக்கு பயிற்சி அளித்தல் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் மனித உரிமைகளை மேம்படுத்த தேசிய செயற்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மனித உரிமை மீறல்களை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் உலக கால மீளாய்வு அமர்வுகளில் இலங்கை தொடர்பில் அமெரிக்கா இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளது. இலங்கையில் தொடர்ந்தும் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருகின்றன.

காணாமல் போதல்கள், கொலைகள், கருத்து சுதந்திரத்தின் மீது அச்சுறுத்தல், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மீது அழுத்தங்கள் என பல்வேறு வழிகளில் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

நீதிமன்றின் சுயாதீனத் தன்மையை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நீதிமன்றக் கட்டமைப்பில் அரசாங்கம் தலையீடு செய்யக் கூடாது.நீதிமன்ற நியமனங்கள் தொடர்பில் நீதியானதும் வெளிப்படையானதுமான ஓர் பொறிமுறைமையை உருவாக்க வேண்டும்.

அகதிகளை மீள் குடியேற்றல், போர் வலய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல், பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தல் போன்றன தொடர்பில் இலங்கையின் நடவடிக்கைகள் வரவேற்கப்பட வேண்டியவை என அமெரிக்கா தெரிவித்துள்ளது.


## அரசுக்கு...

இந்த நிலைமை மொத்த தேசிய உற்பத்தியை மோசமாக பாதிக்கும். சலுகை அடிப்படையில் ஈரானிலிருந்து எரிபொருள் கிடைக்கப் பெற்றது.

அமெரிக்க விதித்த பொருளாதாரத் தடை காரணமாக ஈரானிலிருந்து மசகு எண்ணெய் பெற்றுக்கொள்வதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு பல பிரச்சினைகள் காணப்பட்டாலும் போர் இடம்பெற்ற காலத்திலும் அரசாங்கம் முடிந்தளவு மக்களுக்கு சலுகைகளை வழங்கும், வழங்கி வருகின்றது என் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# வலி.கிழக்கு பிரதேச சபை புதிய கட்டடத் திறப்பு



(புத்தூர்)

மாகாண சபையின் உள்ளூராட்சி அமைச்சின் நிதியுதவியுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வலி.கிழக்கு பிரதேச சபையின் கட்டடத் தொகுதியை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுனர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

வலி.கிழக்கு அச்சுவேலி பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் தொகுதியே நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மாகாண சபையின் உள்ளூராட்சி அமைச்சின் 26 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் வலி.கிழக்குப் பிரதேச சபைக்கான உபஅலுவலகம், நூலகம் மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை ஆகியன புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

மேற்படி புதிய கட்டடங்களை அமைச்சர் மற்றும் வடமாகாண ஆளுநர் ஆகியோர் பங்கேற்று திறந்து வைத்ததுடன், கட்டடத் தொகுதியையும் பார்வையிட்டனர்.

தொடர்ந்து பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஜெயகரன் தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் வடமாகாண ஆளுநர் உரையாற்றும் போது, மக்களுக்கான சேவைகளை திறம்பட மேற்கொள்ளப்படும் வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டல்களுக்கு அமைவாக வடபகுதியில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், மக்கள் சேவையை நோக்காகக் கொண்டு இப்புதிய கட்டடத் தொகுதியும் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

அந்த வகையில், ஜனாதிபதியினதும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினதும் வழிகாட்டலுடனும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமைத்துவத்துடனும் மேலும் பல்வேறு அபிவிருத்தி செயற்திட்டங்கள் எதிர்காலங்களில் முன்னெடுக்கப்படும் எனவும் உறுதிபடத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) உரையாற்றினார்.

இதன்போது வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் வரதீஸ்வரன், உள்ளூராட்சி ஆணையாளர் ஜெகூ, வலி.கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் திருமதி ஜெயந்தா சோமராஜ், ஈ.பி.டி.பி.யின் வலி.கிழக்கு பிரதேச அமைப்பாளர் ஐங்கரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# மின்தடை பற்றிய அறிவித்தல்

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர்அழுத்த மற்றும் தாழ்அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்வதற்காகவும் புதிய உயர்அழுத்த மின்மார்க்கங்களின் கட்டமைப்பு மற்று இணைப்பு வேலைகளுக்காகவும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் சுன்னாகம், கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, மட்டுவில், தலங்காவில்ப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பரமேஸ்வரா சந்தி, கந்தர்மடம், ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, வேம்படி, குருநகர், பாசையூரின் ஒரு பகுதி, பிறவுண் வீதி, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி, மாவடி, தட்டார்தெரு தொடக்கம் முட்டாஸ் கடைச் சந்தி வரையான பிரதேசம் ஆகிய இடங்களிலும்

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் சுன்னாகம், கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, மட்டுவில், உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப்பிரதேசம், திருநெல்வேலிப்பிரதேசம், பட்டணப்பகுதி, யாழ் மாநகரசபைப்பகுதி, ஸ்ரான்லி வீதி, நாச்சிமார் கோவிலடி முதல் முட்டாஸ் கடை சந்தி வரையான பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

05.11.2012 திங்கட்கிழமை, 07.11.2012 புதன்கிழமை மற்றும் 09.11.2012 வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரையும் அளவெட்டி, மல்லாகம் ஒரு பகுதி, பன்னாலை, வித்தகபுரம், சிறுவிளான், விளான், அம்பனை ஆகிய இடங்களிலும்,

06.11.2012 செவ்வாய்க்கிழமை, 08.11.2012 வியாழக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் சுன்னாகம், கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, மட்டுவில் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

அத்துடன், மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் பிரதேசங்களிலுள்ள மின்மார்க்கங்களுக்கு இடையூறாகவுள்ள மரக்கொப்புக்கள், தென்னை ஓலைகள் என்பவற்றை வெட்டியகற்றி உதவுமாறு பொதுமக்களை மின்சார சபையினர் கேட்டுள்ளனர்.

# யாழில் இந்தியத் தூதரகம் நுண்கலைப் பயிற்சி வழங்கும்

## ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணத்தில் இந்திய துணைத்தூதரகத்தினால் நுண்கலைப் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இதில் ஆர்வமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கிறது.

யாழ். இந்திய துணைத்தூதரகமானது தூதரக வளாகத்தில் அமைந்துள்ள இந்திய கார்னர் இல் கலை கற்க ஆர்வமுள்ள மாணவர்களுக்காக பின்வரும் பாடநெறிகளை ஆரம்பிக்கவுள்ளது.

பரதநாட்டியம், கர்நாடக இசை, சங்கீதம், இசைக்கருவிகள்: மிருதங்கம், வீணை, வயலின், புல்லாங்குழல், யோகா, ஹிந்தி ஆகிய பாடநெறிகளில் இணைந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் கீழே கேட்கப்பட்டுள்ள விபரங்களை cul.jaffna@mea.gov.in எனும் மின்னஞ்சல் முகவரிக்கு எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

பெயர் மற்றும் வயது இணையவுள்ள பாடநெறி (ஒன்றுக்கு மேற்பட்ட பாடநெறிகளை தெரிவுசெய்ய முடியும்)

பயிற்சிகளுக்கு வார நாட்களில் மாலை 5.00 மணியிலிருந்து 7.00 மணிவரை சமுகமளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

பயிற்சிகளுக்கு வார இறுதி நாட்களில் பகற்பொழுதில் சமுகமளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

பாடநெறிக்கான பதிவுக் கட்டணம் செலுத்த முடியுமா? (ஆம், இல்லை)

தங்களுக்கான இசைக்கருவிகளை எடுத்துவர முடியுமா?

மேலதிக தொடர்புகளுக்கான உங்கள் மின்னஞ்சல் முகவரி.

பயிற்சிநெறிகள் அனைத்தும் இந்தியத் துணைத்தூதரகம் இல 14, மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நவம்பர், டிசம்பர் மாத பகுதியில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

# மூன்று நாள் காய்ச்சல்; இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

மூன்று நாள் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் நேற்று அதிகாலை யாழ். போதனா வைத்தியசாலையில் மரணமடைந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அராலிச் சந்தி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஞானசேகரம் ராஜகோபால் (வயது-21) என்ற இளைஞரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.


கடந்த 29 ஆம் திகதி காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்த இவர் கடந்த 30 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த வேளை அவர் நேற்று அதிகாலை 1.00 மணிக்கு மரணமடைந்ததாக உறவினர்கள் தெரிவித்தனர்.

எனினும், இந்த இளைஞருக்கு ஏற்பட்டுள்ள நோய் எதுவென வைத்தியர்களால் இனங்காண முடியவில்லை என்றும் தெரிவித்த உறவினர்கள் அவரது வாய், மூக்குப் பகுதிகளினால் இரத்தக் கசிவு ஏற்பட்டதாகவும், இதன் பின்னர் அவர் மரணமடைந்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்த இளைஞரது சடலம் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்காக நேற்றுப் பிற்பகல் யாழ். போதனா வைத்தியசாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டிருந்தது.

(பா)

13 ஆம் ஆண்டு நினைவழியா நாள்...



அமரர் அற்புதன்


-தினமுரசின் ஸ்தாபகரும் ஆசிரியரும்-

தோழர்-ரமேஷ்

நடராஜா அற்புதராஜா

உதிர்வு:-1999.11.02

முகவரி:-அராலி மத்தி.
வட்டுக்கோட்டை.
யாழ்ப்பாணம்.



அன்னைத் தமிழை -எழுத்தால்
அணியூட்டி
வண்ணப் பேரழகியாய்
வரிசைபெற வைக்க எண்ணி
உண்மையுடன் உழைத்தவனே!

நாடழிந்து நலிவடைந்து
நாதியற்றுக் கிடக்கின்ற
நற்றமிழ் அன்னையினை
நானிலந்தன்னில்
கொற்றமோடு கொலுவைக்க
தக்கதொரு வழிதேடி
உற்ற தோழர் தனை நாடி
உவப்புடனே சேர்த்து நின்றவனே!

13 ஆண்டுகள்
கரைந்தோடிப் போனாலும்-உம்
ஈரமான நினைவுகள் - எம்
இதயத்தை வதைக்குதய்யா
பூதவுடல் பூமிக்கடியில்
விதைக்கப்பட்டதால்
பெரு விருட்சமாய் - எம்
மனங்களில் வாழ்பவரே!
உம் கனவுகளை
எம்மில் சுமந்து
உம் தடத்தில் எம் பணி
தொடரும்...

தினமுரசு

-குடும்பத்தினர்-

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 நவம்பர் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.